Registered at the G. P. O. as a Newspaper ★★ விலை சதம் 15

தமிழ்நாடு

தேசிய தினசரி National Tamil Daily

ஞா 7 குரோத பங்குனி 9 திங்கட்கிழமை 11-4-66 பிற்பகல் 6 மணி

எமது கண்ணோட்டம்

யோக சுவாமிகள் குருபூசை இன்று கொண்டாடப் படுகிறது. சென்றவருடம் இதே தினத்தில் யோக முனிவர் சமாதியடைந்த போது நாம் விசேஷமலர் ஒன்று வெளியிட்டுப் பெருமையடைந்தோம். இன்றும் அன்பர்கள் பலரின் கட்டுரைகளுடன் 'யோக மலரை' மகிழ்ச்சியுடனும் நன்றியுடனும் வெளியிடுகிறோம்.

யோகமுனிவர் சமாதியடைந்து ஓர் ஆண்டு பூர்த்தியடைந்துவிட்டது. இதற்குள் எத்தனையோ நிகழ்ச்சிகள் நாட்டில் நடந்து முடிந்துவிட்டன. இது நடக்கும் இது நடவாது என்று தீர்மானிப்பதற்கு நாம் யார்?

சுவாமிகள் வெறும் துறவியல்ல. நாட்டு மக்களையும் நாட்டையும் பற்றிச் சிந்தித்த தேசிய முனிவர். நமது வாலிபர்கள் உத்தியோக மோகத்தைக்கைவிட்டு விவசாயத்தில் ஈடுபடவேண்டுமென்பது சுவாமிகளின் நல்வாக்கு. குறிப்பாகப் படித்த வாலிபர்கள்விவசாயத்திலீடுபடவேண்டுமென்று கூறிவந்ததுடன் சிலரைச் செயலிலும் ஈடுபடச் செய்தார். இன்று இதே நோக்கத்துடன் செங்கலடியில் 'சிவதொண்டன்' நிலையக் கிளை அமைக்கப்பட்டுள்ளது. ஆத்மீக சேவையுடன் விவசாயத்தைப் பெருக்கவும் இதில் படித்த வாலிபர்களை ஈடுபடுத்தவும் செங்கலடியில் சில ஏக்கர் நிலங்கள் எடுக்கப்பட்டுள்ளன. இன்று ஆட்சிக்குவந்துள்ள தேசிய அரசாங்கமும் விவசாயத்தை விருத்திசெய்வதற்கு முக்கியத்துவமளிக்க உறுதிபூண்டுள்ளது. விவசாயவிருத்திக்கு அரசாங்கம் முக்கியத்துவமளிக்க இப் பொழுதுதான் தீர்மானித்துள்ளது.

சுவாமிகள் தீர்க்கதரிசி.

சுவாமிகள் தேசிய ஒற்றுமையையும் சிந்தித்து வாழ்ந்தவர். இங்கு இன, மத வேறுபாடுகள் தோன்றியபோதெல்லாம் சிந்தித்தவர். அவரது சிந்தனை இன்று 'தேசிய அரசாங்க'மாக அமைந்துள்ளதெனக் கொள்ளலாம். சமூக, சமயவேற்றுமைகள் நாட்டுக்குப் பொல்லாப்பாக முடியலாம் என பலரும் அஞ்சினர். ஆனால் யோக முனிவரின் வாக்கு "ஒரு பொல்லாப்புமில்லை." என்பதாகும். இன்று பொல்லாப்புகள் நீங்கி தேசியஒற்றுமை தோன்றுவதற்கான நம்பிக்கை ஒளிதோன்றுகிறது.

இந்த ஒற்றுமை வளர்ந்தோங்கி நாடு செழிப்புடன் திகழ இப்புண்ணிய தினத்தில் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

"பதிற்காலத்துக்கு ஏற்ற கல்வித் திட்டம் அவசியம்"

கூல்லூரி அதிபர் கருத்து

யாழ்ப்பாணம். சனி

"மாணவர்களுடைய எதிர்கால வாழ்வுக்குகந்த கல்வித்திட்டம்இப்பொழுது வழங்கப்படுவதில்லை.ஏழாம் வகுப்புடன் வெளியேறிய மாணவன் சில சமயத்தில் இலட்சாதிபதியாகின் முன். காரணம், அவனிடத்தில் ஏதோவொரு நுட்பமிருப்பதுதான். எனவே மாணவருக்கேற்ற கல்வித்திட்டம் அவசியம் கருத்திற்கொள்ளவேண்டும் என்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் திரு. ஈ. சபாலிங்கம் வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி ஆசிரியர்கழகத்தினால் நடாத்தப்பட்ட விருந்துபசாரத்திற்குபிரதம விருந்தினராகக்கலந்துஉரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரிய கழகத்தலைவர் பண்டிதர் த. சுப்பிரமணியத்தின் தலைமையில் நடைபெற்ற கல்லூரியின் முதலாம் பருவ விடுமுறைகால விருந்தின்போது திரு. சபாலிங்கம் மேலும் கூறியதாவது:

"தற்போது பிரச்னைகள் ஏற்பட்டபின்னர்தான் வழி

(10ம் பக்கம் பார்க்க)

புதுவருடம் பிறப்பை முன்னிட்டு
8-4-65 — 12-4-65
மலிவு விற்பனை
நடைபெறும்.
கைத்தறிச் சேலைகள் 100, 120, 160 ரூபா
மற்றும் இலங்கா வேட்டி சால்வை சேலைகள்
வோயில் வேட்டிகள்
மற்றும் எல்லா ஜவுளி வகைகளும் விலைகள்
குறைக்கப்பட்டிருக்கின்றன.
தேவைக்கு முந்திக் கொள்ளுங்கள்
ஆ. அப்பையா அன் கோ.,
82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை,
போன்: 506 யாழ்ப்பாணம்.

கூ. மொ. வி.

கணக்கு பரிசோதனை நடத்த மந்திரி திடீர் உத்தரவு

புதுவருடத்தை முன்னிட்டு தணிகளுக்கு கோட்டா அதிகரிப்பு

பம்பலப்பிட்டி, சனி

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தின் கணக்கு விபரங்களை பரிசோதனை செய்து தபசு அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரசாங்க கணக்காளரை வர்த்தக மந்திரி டாக்டர் பெ. வி. பீரிஸ் உத்தரவிட்டுள்ளார்.

கூ. மொ. வி. ஸ்தாபனத்தின் புதிய தலைவர் திரு. ஜே. அமரத்துங்காவுடன், வர்த்தக மந்திரி இன்றுகாலை பேச்சுவார்த்தை நடத்தினர், பேச்சுவார்த்தையின் போது ஸ்தாபனத்தின் உயர் அதிகாரிகளும் பங்கு கொண்டனர். கூ. மொ. வி, ஸ்தாபனத்தில் தற்போதுள்ள இருப்புகளை கணக்கிடுமாறும் மந்திரி உத்தரவிட்டார்.

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தில் நிலவிய ஊழல்களையும், குறைபாடுகளையும் கண்டுபிடித்து நிவிர்த்திக்கும் பொருட்டு தேசிய அரசாங்கம் மேற்கொள்ளவிருக்கும் நடவடிக்கைகளில் இது முதலாவதாகும். கூ. மொ. வி, ஸ்தாபனத்தில் ஊழல்கள் பற்றி விசாரிக்க கமிஷன் ஒன்று நியமிக்கப்படும் எனவும், நிர்வாகம் பம்பலப்பிட்டி, சனி திருத்தியமைக்கப்படும் எனவும் சிம்மாசனப் பிரசங்கத்தில்குறிப்பிடப்பட்டிருந்தது மக்கள் மத்தியில் பாவனைக்கு பெருமளவில் உபயோகிக்கப்படும் 'ஜம்பிங் பிஷ்' போன்ற துணிவகைகளின் கோட்டாக்களை கூட்டுறவு சமாஜங்களுக்கும், கூட்டுறவு சங்கங்களுக்கும் அதிகரிப்பதென கூ. மொ. வி. நிர்வாகம் தீர்மானித்துள்ளது, இந்த ரக துணிவகைகளை கூப்பனுக்கோ, கூப்பனில்லாமலோ பெற்றுக் கொள்ளலாம்.

தமிழரசுக்கட்சி மாநாடு நாளை ஆரம்பம்

நல்லூர், ஞாயிறு

தமிழரசுக்கட்சியின் பொதுச்சபைக் கூட்டம் இன்று யாழ்ப்பாணத்திலுள்ள கட்சிக் காரியாலத்தில் நடைபெறவிருக்கின்றது. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் தலைமையில் நடைபெறும் இக்கூட்டத்தில் பல முக்கிய முடிவுகள் செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுத் தேர்தல் நடைபெற்றபின் முதன்முதலாக யாழ்ப்பாணத்தில் தமிழரசுக்கட்சியின் பொதுச்சபை கூடுகிறது. வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழரசு எம். பி. க்கள் இக்கூட்டத்தில் கலந்துகொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. சிம்மாசனப்பிரசங்கத்தில் கலந்துகொண்டுவிட்டு அவர்களிற் பலர் நேற்றையதினம் யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தனர். மற்றும் பலர் இன்று காலை யாழ்ப்பாணம் வந்து சேர்வார்கள் எனவும்எதிர்பார்க்கப்படுகிறது.

ஐக்கியதேசியக்கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கமொன்றினை அமைக்க நேரிட்ட சூழ்நிலைபற்றியும் கட்சியின் அடுத்தநடவடிக்கைகள் என்ன என்பது பற்றியும் பொதுச்சபை பரிசீலனை செய்யும். தமிழரசுக் கட்சியின் கொள்கைகள் பற்றியும் தற்போதைய நடவடிக்கைகள் பற்றியும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் பிரசாரஞ் செய்வதற்கான நடவடிக்கைகள் பற்றியும் ஆராயப்படும்.

கொழும்பு மாநகரசபையின் புதிய மேயர் திரு. வின்சன்ட் பெரேரா

பம்பலப்பிட்டி, சனி

கொழும்பு மாநகரசபையின் புதிய மேயராக ஐக்கிய தேசிய கட்சியைச் சேர்ந்த திரு. வின்சன்ட் பெரேரா தெரிவு செய்யப்பட்டார்.

உதவி மேயராக தெரிவு செய்யப்பட்டவரும் ஐக்கிய தேசியக்கட்சி அங்கத்தவரே. திரு. ஹரிவிக்கிரம துங்கா உதவிமேயராவார்.

மேயர் பதவிக்கு ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த திரு. வின்சன்ட் பெரேராவின் பெயரும், லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்த திரு. ஆனந்த பிரேமதாசாவின் பெயரும் பிரேரிக்கப்பட்டன. திரு. பெரேராவுக்கு 33 வாக்குகளும் திரு. பிரேமதாசாவுக்கு 7 வாக்குகளும் கிடைத்தன. உதவிமேயர் திரு. ஹரிவிக்கிரமதுங்காவுக்கு 33 வாக்குகளும் அவரை எதிர்த்து போட்டியிட்ட கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு. ஹரிச்சந்திர மென்டிஸுக்கு 7 வாக்குகளும் கிடைத்தன.

மேயர், உதவிமேயர் தெரிவை மாநகரசபைக் கமிஷனர் திரு. பி. ஏ. ஜெயசிங்கா நடத்திவைத்தார். தேசிய அரசாங்கத்தில் தேசியமயசேவை மந்திரியாக பதவியேற்ற திரு. வி. ஏ. சுகததாசாவின் ராஜினாமாவால் மேயர் பதவி காலியானது.

உடுப்பிட்டி, சனி

வடபகுதி காரியாதிகாரிகளின் மகாநாடு இம்மாதம் 19-ம் திகதி யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

பாத்திரங்கள் வாங்கும் பொழுது
டொலர் மார்க் என்றே கேளுங்கள்


உற்பத்தியாளர்கள்:
அலுமினிய தொழிற்சாலை
மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகமேல

பைபிள் சரித்திரம்

ஓரே உலகம்

ஓரே உலகம், அல்லது ஓரே உலக அரசாங்கம்பற்றி பெரியவர்கள் பலர் வற்புறுத்தி வருகிறார்கள். இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது நம்மால் சொல்ல முடியாத ஒன்று. ஆனால் மக்களையும், தேசங்களையும் ஒன்றாக்க மனிதர்கள் செய்த எத்தனையோ முயற்சிகள் தோல்வியடைந்து விட்டன என்பது சரித்திரத்தின் பாடம்.

பைபிளில் "பாபேல் கோபுரம் பற்றி வருணிக்கப்பட்டிருக்கிறது. கடவுளுக்கு எதிராய் மனிதர்கள் மேற்கொண்ட சவாலின் சின்னமாக பாபேல் கோபுரம் அதில் வருணிக்கப்பட்டிருக்கிறது. சாராம்சம் இது தான்.

ஆதிகாலத்தில் உலகம் ஓரே திட்டமாகவும், ஒரு மொழி பேசுபவர்களைக் கொண்டதாகவும் இருந்தது. ஒருசமயம் பெருவெள்ளத்தால் அழிவுஏற்பட்டது. அதன்பின் சக்தியுள்ள ஒரு மனிதன் தோன்றினான். தன்னுடன் மக்களை ஒன்று திரட்டி "வாருங்கள். ஒரு மகத்தான நகரத்தையும் கோபுரத்தையும் உண்டாக்குவோம். மீண்டும் கடவுள் தம்மை வெள்ளத்தால் தண்டிக்க முடியாத அளவு அவ்வளவு உயரமாகக் கட்டுவோம் என்றுஅழைத்தான். ஆனால் கடவுள் இதற்குத் தண்டனை விதித்தார். நாடுகளையும், மொழிகளையும் வெவ்வேறுகச் சிதறும்படி செய்தார். ஒருவர் பாஷை மற்றவருக்குப் புரியாமல் செய்தார். எனவே கோபுரத்தின் வேலை முற்றுப்பெறவில்லை. ஷினர் சமவெளியில் நடைபெற்ற இந்த பாபேல் (குழப்பம்) கோபுர அமைப்புத்தான் உலகத்தை ஒன்றுபடுத்தமேற்கொள்ளப்பட்ட முதல் முயற்சி என்றும், கடவுளைப் புறக்கணித்து எதிர்கால பாதுகாப்புக்கு மனிதன் மேற்கொண்ட பிழையான செயல் என்றும், ஓரே உலகைச் சிருஷ்டிக்க மனிதனை ஒருபோதும் கடவுள் அனுமதிக்கமாட்டார் என்றும் அதில் சொல்லப்பட்டிருக்கிறது.

பெரிய சம்மேளனங்களை கடவுள் விரும்புவதில்லை என்பதும், இது அகந்தையின் சின்னமாகவும், கடவுளின் திட்டத்துக்கு மாறுகவும், ஒரு மத்தியகேத்திரம், அல்லது ஒரு மனிதனின் ஆட்சி, அல்லது ஒரு குழுவினரின் ஆட்சியில் ஓரே உலகைக் கொண்டுவர அவர் அனுமதிக்கமாட்டார் என்பதும், கிறிஸ்துநாதர் பூமிக்கு வரும்வரை இது நடக்காதுஎன்பதும் பைபிள் கூறும் சரித்திரமாகும்.

இன்னும் தெளிவாகச் சொல்லப்போனால் மனிதனின் திட்டத்தில் நமதுநம்பிக்கை தங்கியிருக்கவில்லை என்பதும், கடவுளின் நோக்கத்துக்கே நாம் உட்பட்டவர்கள் என்பதும் கருத்து.

4 சாம்ராஜ்யங்கள்

பாபிலோனியாவிலுள்ள தொங்கும் பூந்தோட்டத்தைப் பற்றிப்பலர் கேள்விப்பட்டிருக்கலாம். உலகத்தின் ஏழு அதிசயங்களில் ஒன்றாக அது விளங்குகிறது. இதை அமைத்தவன் நேபுகாத்நேச்சார் என்ற மன்னன். மகத்தான சாம்ராஜ்யத்தை அவன் சிருஷ்டித்து அதன் மூலம் ஏற்பட்ட அகந்தையால் உலகை நிரந்தரமாக ஒரு குடைக்கீழ் கொண்டுவர முயன்றான். ஆனால் தோல்வியுற்றான்.

நான்கு மகத்தான உலக சாம்ராஜ்யங்கள் தோன்றி வீழ்ச்சியடைந்தன. பாபிலோன் (கி மு 606-538), பாரசீகம் (கி மு 538-333), கிரீஸ் (கி மு 333-168), ரோம சாம்ராஜ்யம் (கி மு 168-கி பி 476) அது முதல் இதுவரை எவரும் உலகை ஒன்றுபடுத்தியதே இல்லை. 5-ம்சார்ள்ஸ், 14-வது லூயி, நெப்போலியன், சார்ள் 5மன், 2-வது வில்ஹெல்ம், ஹிட்லர் போன்றோர் ஐரோப்பாவை தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவர முயன்று தோல்வியுற்றனர். ஒப்பந்தங்கள், கலப்பு மணம், ராணுவ பலம் போன்ற பல்வேறு முயற்சிகள் பலதடவை மேற்கொள்ளப்பட்டும் ஐரோப்பாவை ஒன்றுக்க முடியவில்லை. இந்த விஷயங்கள் ஆழ்ந்த சிந்தனைக்குரியவை. மற்றோர் விஷயம் மேலும் சிந்தனைக்குரியது.

ஐக்கிய ஐரோப்பா

ஐரோப்பாவின் பலநாடுகளிலிருந்து குடியேறிய மக்கள் ஓரே ஐக்கிய அமெரிக்காவை அமைத்திருக்கிறார்கள். இருந்தும் அதேமக்கள் ஏன் ஒரு ஐக்கிய ஐரோப்பாவை அமைக்க முடியவில்லை?

ஐரோப்பா பிரெஞ்சுக்காரர்களையும், ஜெர்மானியர்களையும், ஸ்காண்டிநேவியர்களையும், இத்தாலியர்களையும், ஒல்லாந்தர், பெல்ஜியர், ரஷ்யர், பொலிஷ்காரர்கள் ஆகியோரையும் உற்பத்தி செய்திருக்கிறது. ஆனால் ஒரு ஐரோப்பியரை அது ஒரு போதும் உற்பத்தி செய்யவில்லை, இவ்வளவு மக்களும் கூடி ஒரு அமெரிக்கனை உற்பத்தி செய்திருக்கும் போது, அதே மக்கள் தங்கள் மூலஸ்தானத்தில் ஏன் ஒரு ஐரோப்பியனை உற்பத்தி செய்யவில்லை?

ஐக்கிய உலகம்

எனினும் ஐக்கிய ஐரோப்பா ஒன்றை சிருஷ்டிப்பதுடன், ஐக்கிய உலகம் ஒன்றைச் சிருஷ்டிப்பது பற்றியும் பேசப்படுகிறது. கவிஞர்கள், சிந்தனையாளர்கள் மட்டுமின்றி அரசியல்வாதிகள், மதத்தலைவர்கள் ஆகியோரும் இது பற்றிப் பேசுகிறார்கள். "அணுக்குண்டு மனித நாகரிகத்துக்குச் சவால் விடுகிறது. இந்நிலையில் ஓரே உலக அரசாங்கம், அல்லது அழிவு" என அவர்களின் வாதம் அமைந்திருக்கிறது.

தீமையைக் கண்காணிப்பதற்காகவே உலகில் பிரிவினைகளையும், பகைமையையும் கடவுள் அனுமதித்திருக்கிறார் என்பது பைபிளின் பாடம். இந்த அடிப்படையில் பார்த்தால் உலக ராஜ்யம் ஒன்றை அமைக்கும் முயற்சியை பாபேல் கோபுர முயற்சியுடனேயே ஒப்பிடவேண்டும்.

ஐ. நா. வை ஏற்கலாமா?

ஐ.நா.வை உலகஅரசாங்கமாக ஏற்றால் அதிலேயும் எத்தனை பிரிவினைகள்! கிழக்கு, மேற்கு பிரிவினை. சீனா இல்லாக்குறை. இந்தோனேஷியா வாபஸ். இன்னும் பலவற்றைக் கூறலாம். ஐரோப்பாவிலே சண்டை நின்றால் ஆசியாவில் வேறு சண்டை ஆரம்பிக்கிறது. கொரியாவில் நின்றால் வியட்னாமில் ஆரம்பம். வியட்னாமில் நின்றால் மலேஷியா. ஆபிரிக்காவில் ஒருவருக்கொருவர் தகராறு. ஆசியாவில் ஒருவருக்கொருவர் தகராறு. ஐரோப்பாவில் ஒருவருக்கொருவர் தகராறு. அமெரிக்காக் கண்டத்திலும் ஒரு நாடு மற்றோர் நாட்டின் மீதுபகை.

பைபிளின் சாராம்சம் இவற்றுக்கு ஒரு உவமானமாகவே கொடுக்கப்பட்டது. ஆனால் நடைமுறையும் இதற்கு ஒத்துத்தான் இருக்கிறது. தனிமனிதனை, அல்லது ஒரு குழுவோ, அல்லது ஒரு ஸ்தாபனமோ உலகை இதுகாலம்வரை ஒன்றுபடுத்த முடியாவிட்டால், இனிமட்டும் அது எவ்வகையில் சாத்தியம் என்பது அனைவருக்கும் ஒரு சவால்.

போராட்டக் காரர்கள்

தற்போது மத்திய கிழக்கில் சஞ்சரித்துவரும் ஷேக் அப்துல்லாவின் நடவடிக்கைகள் பற்றி ஒன்றுக்கு மேற்பட்டநாடுகள் சிரத்தை கொண்டிருக்கின்றன. சில வட்டாரங்கள் அவரது நடவடிக்கைகளுக்கு ஊக்கமளித்தும் வருகின்றன. ஆனால் டில்லி அரசாங்கத்துக்கும், காஷ்மீர் அரசாங்கத்துக்கும் அவர் தீராத் தொல்லையளித்து வருகிறார்.

ஷேக் அப்துல்லா பெரிய ஓர் அதிர்ஷ்டக்காரர். அவரது பெயரை எவர்ாலும் நசுக்க முடியாமலிருப்பது ஒரு விசித்திரமான விஷயம். அவரைச்சிறைக்குள் தள்ளினாலும் "ஷேக் அப்துல்லா ஷேக் அப்துல்லா" என்று அவர் பெயர் வெளியே கிளப்பப்படுகிறது. வெளியேவிட்டாலும் அவரது நடவடிக்கைகள் பலரது கவனத்தை ஈர்த்துவருகிறது. போராட்டக்காரர்களின் வாழ்வில் இது இயல்பான ஒரு விஷயம். பொதுவாகஇத்தகைய மனிதர்கள் ஓயவேமாட்டார்கள்.

தமிழ் நாட்டில் ராஜாஜியின் பெயரை நசுக்க எத்தகைய முயற்சிகளெல்லாம் மேற்கொள்ளப்பட்டன? ஆனாலும் ராஜாஜி ஓயாத போராட்டக்காரராய்ப் பிறந்திருப்பதால் இம்முயற்சிகள் வெற்றி பெறவே எதிரிகளாலும்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

'மனிதப்பிறவியுங் வேண்டுவதே இம் மானிலத்தே'

— பெரி. சண்முகதாஸ் —

உலகத்தில் உயிர்கள் எடுக்கும் பிறவிகளுள் சிறந்தது மனிதப்பிறவி. மனிதப் பிறவியின்மாண்பினை "அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்றுஔவைப் பெருமாட்டியும், "மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மானிலத்தே என்று அப்பர் பெருமானும் அறிவுறுத்தினர். மனிதப்பிறவி எடுக்கும் போதும்,

"தோன்றிற் புகழொடு
தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றுமை
நன்று"

என்று வான் மறை தந்த வள்ளுவனும்வகுக்கின்றார் எனவே இம்மனிதப் பிறவியின் மாண்பினையும் பயனையும், இப்பிறவியில் அடையும் இன்பத்தையும் பற்றி இங்கு சிறிது காண்போம்.

பிறவிக்குக் காரணம்வினை. வினை, நல்வினை, தீவினைஎனப்படும். இந்த இருவினையால் தான் பிறவித் தொடர் விடாது சூழ்ந்துவருகின்றது. இதனையே அருணகிரிவள்ளலும்;

'விதிகாணும் உடம்பை
விடாவினையேன்
கதி காண மலர்க்கழல்
என் றருள்வாய்'

என்றியம்புகின்றார்.

உயிர்களின் சிகரமாக இருப்பவன் மனிதன். ஆகவே மனிதன் அன்பு என்ற ஒன்றைமேற்கொள்ள வில்லையென்றால் அவன் மனிதனுகமாட்டான். இது பற்றியே தெய்வப்புலவரும் தம் குறளில்,

"அன்பின் வழியது
உயிர் நிலை அஃதிலார்க்கு
என்பு தோல்
போர்த்த உடம்பு

என்று மொழிகின்றார்.

உயிர்கள் என்றும் உள்ளவை. பிறவி ஒழியாது எய்துகின்றன. எல்லாப் பிறப்பும் எடுத்தெடுத்து, மாறி மாறி வருகின்றன. உயிர்கள் நால்வகைத்தோற்றங்களில் எழுவகைப்பட்ட பிறப்புக்களை எய்துகின்றன. கல்லாகவும், புல்லாகவும், புள்ளாகவும், மாக்களாகவும், மனிதராகவும், தேவராகவும் மாறி மாறிப் பிறக்கின்றன. இதனையே கல்லிலும் கரையச் செய்யும் திருவாசகத்தில் மணிவாசகரும்,

"புல்லாகிப் பூடாகிப்
புழுவாய் மரமாகிப்
பல் விருக மாகிப்
பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப்
பேயாய் கணங்களாய்
வல்ல சுரராகி
முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற
இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்
திளைத்தேன் எம்பெருமான்

நாகாலாந்தில் பிலோ என்றொருவர் இருந்தாரே ஞாபகமிருக்கிறதா? பகை நாகர்களுக்குத் தலைமை வகித்து அவர் இந்தியாவுக் கெதிராக ஆயுதப் போராட்டம் நடத்திவந்தார். அவர், மீது கைதுவாரண்டும் பிறப்பிக்கப்பட்டது. தனது முயற்சியில் தோல்வியுற்று அவர், இங்கிலாந்துக்கு ஓடிவிட்டார். சுமார் ஐந்து ஆண்டுகளாக நாகாலாந்துக்கு வெளியே இருக்கும் அவர் இப்போது பிரிட்டிஷ் பிரஜா உரிமை பெற்றவராகவே இருந்து வருகிறார். சீனாவுக்குச் செல்லவும் முயற்சித்துவருகிறார். இந்திய அரசாங்கம் இது குறித்து பிரிட்டனுக்கு ஆட்சேபம் தெரிவித்திருக்கிறது. இப்படி எத்தனையோ போராட்டக்காரர்கள் இருக்கிறார்கள். அவர்களை அடக்கியும் செய்வதும் முடியாத காரியமாய் இருக்கிறது.

என்று கூறி இறைவனின் திருமலரடிகளைக்காண விழைத்து முறையிடுகின்றார்.

மனிதப்பிறவி எடுத்தவரிலும் அறிவு விளக்கம்பெற்று அதன் வழி ஒழுகுவாரே மாண்புடையராவர். அவர் தமக்கெனவாழாது, பிறர்க்கென வாழும் இயற்கை வாழ்வு வாழ்வர். அவ்வாழ்வே நம்மவரின் அறநூல்கள் எடுத்துரைக்கும் அருள் வாழ்வாகும். கி. மு. ஐந்தாம்நூற்றாண்டில் அருளறம் பூண்ட அண்ணலாய் விளங்கினர் புத்தர்பெருமானர். இந்த நூற்றாண்டில் அண்ணல் காந்தியடிகளது வாழ்வு இவ்வருள்வாழ்விற்கு எடுத்துக்காட்டாய் இலங்கியது. தமிழ்ச் சான்றோர்களான திருவள்ளுவர், தாயுமானவர், இராமலிங்கர் முதலியவர்களும் இவ்வாறு வாழ்ந்தவர்களே. இவர்கள் யாவரும் மனிதப்பிறவியின் மாண்பினுக்குச் சான்றாக விளங்கிய ஆன்றோர்களாவர்.

இம்மனிதப்பிறவியில் மனிதன் அடையும் இன்பம் மிகவும் சிறிதே. இம்மானிட கதியில் அடையும் இன்பத்தினைப் பற்றி சமணமுனிவரொருவர் பின்வருமாறு கூறுகின்றார். "காட்டில் வழிதவறிய ஒருவனைப் புலி ஒன்று துரத்திக் கொண்டு ஓடிற்று. புலிக்குத் தப்பிக் கொள்ள அவன் ஒரு மரத்தில் ஏறிக்கொண்டான். பொழுது சாய்ந்த நேரமாகையால், இரவுப்பொழுதை மரத்திலேயே கழிக்க முடிவு செய்தான். ஒரு மரக்கிளையைக் கெட்டியாகப் பற்றிக் கொண்டு அதில் படுத்துத் தூங்கினான். தூக்கத்தில்பிடி தவறியது. கீழே விழும் சமயம் விழித்துக்கொண்டான். கையால் மீண்டும் மரக்கிளையைப் பிடிக்கத் தாவினான். கிளை அகப்படவில்லை. கிளையில் பின்னிக் கொண்டிருந்த கொடி அவன் பிடிக்கு அகப்பட்டது. ஆனால் கொடி அறுந்துவிட்டது. ஆதலால் மரத்தடியில் இருந்த ஒரு பாழுங் கிணற்றில் வீழ்ந்தான். கிணற்றுச் சுவரில் படர்ந்து தொங்கிய கொடிகளைப் பிடித்துக் கொண்டு தொங்கினான். கிணற்றிலிருந்த ஒரு பாம்பு அவனைப் பார்த்துச் சீறிக் கொண்டு பாய்ந்தது. அப்பாம்பினின்றும் தப்ப மேலேறினான். மேலே நின்ற ஒரு மதயானை அவனைப்பார்த்துபிளிறிற்று. என் செய்வான் பாவம்! மேலேறினால் மதயானை! கீழிறங்கினால் பாம்பு! அவன் பிடித்திருந்த கொடியாவது பயன்பட்டதா என்றால், அதுவுமில்லை. கிணற்றைச் சுற்றி ஓடிவந்த இரண்டு எலிகள் கொடிகளைப் பற்களால் நறுக்கிக் கொண்டிருந்தன. அவன் கதி பாம்பினிடம் அகப்படவேண்டியதுதான்! இந்நிலையில் மேலிருக்கும் மரக் கொம்பின் உச்சியில் கட்டப்பட்டிருக்கும் தேன் கூட்டிலிருந்து ஒருசொட்டுத் தேன் அவன் வாயில் சிந்தியது. அத் தேன்துளியைச் சுவைத்து அவன் அடைந்த இன்பம் அளவிடற்கரியது. அடுத்த நிமிஷம் அவனை அப்போதும் பரிதாப நிலையையும் மறந்து மகிழ்ந்தான். இத்தகையதே மானிடர் அடையும் இன்பம்.

இம்மனிதப் பிறவியில்தான் உயிர்கள் யாவும் கடவுளுடன் இரண்டறக் கலக்கவும், கடவுளது அருளைப் பெறவும் முடிகிறது. சைவநாயன்மார்களும், மற்றும் அடியார்களும் கடவுளது அருளை இம்மனிதப்

(தொடர்ச்சி பக்கம்)

யோக சுவாமிகள் | உன்னை முழுவதும் ஒப்புக்கொடுத்தால் அன்னையைப் போலே ஆதரிப்பாரே—யோகவாக்கு | நினைவு மலர்

ஒரு சந்யாஸியின் ஆத்ம கீதம்

ச. அம்பிகைபாகன்

யோக சுவாமிகள் செய்த அரும்பணிகளைப் பற்றி ஆராயமுன் ஞானிகளுக்கும் பணிகளுக்குமுள்ள தொடர்பை ஆராய்வது பயனுடைத்தாயிருக்கும். முதலாவதாக ஞானிகள் தங்கள் வாழ்க்கை மூலம் பெரும்பணியாற்றுகின்றார்களென்பதை நாம் உணரவேண்டும். கானல் நீரைக் கண்டு ஓடித்திரியும் மான்கள் போல, உலகமக்கள் ஆசைகளால் உந்தப்பட்டு பொன்னை, மாதரைத்தேடி அலைகின்றார். இப்படியான உலகத்திலே நித்திய வஸ்துவைத் தேடுவதில் தங்கள் வாழ்நாட்களைக் கழிக்கும் ஞானிகள் உலகத்தோருக்குக் கலங்கரை விளக்கமாக விளங்குகின்றனர்.

உலகத்திலே தோன்றிய மகான்கள் தங்களை உலகத்துக்குக் காட்டாமல் மறைந்து விடுகின்றனரென்றும். ஆனால் இப்படி மறைவாக வாழ்ந்தவர்களின் தூய சிந்தனைகளே உலகத்தை வாழ்விக்கின்றன வென்றும் சுவாமி விவேகானந்தர் கூறியுள்ளார். இதனால் சிந்தனைகள் மூலமே பணிபுரியலாமென்பது பெறப்படுகிறது.

உலக விவகாரங்களில் ஈடுபடாத ஞானிகளும் ஒரு பெரும் பணியைச் செய்யத் தவறுவதில்லை, அது தான் தாம் பெற்ற ஞானச் செல்வத்தைப் பக்குவமுள்ள சீடர்களுக்கு வழங்குவதாகும். இந்த அரும் பண்பை உபநிடத காலத்திலிருந்து இற்றைநாள் வரைக்கும் நமது ஞானிகளிடத்து நாம் காண்கின்றோம். தைத்திரீய உபநிடதத்தில்ஒரு குரு பின் வருமாறு பிரார்த்திக்கின்றார். "பிரமச்சாரிகள் என்னை நாடி எல்லாத்திக்குகளிலுமிருந்து வரவேண்டும், இந்திரிய ஜயமுடையவர்களாகவும், சாந்தமான மனதுடையவர்களாகவும். அவர்கள் இருக்கவேண்டும், மாதங்களால் வருஷம் பூர்த்தியாவது போல் நல்ல சிஷ்யர்களால் என் வாழ்க்கை பூர்த்தியடைய வேண்டும்." இராமகிருஷ்ண பரமஹம்சர் அனுபூதியடைந்தபின்பு தாம்பெற்ற இன்பத்தைத் தக்க சிடர்களுக்குக்கொடுப்பதற்குத் தவித்துக் கொண்டிருந்ததாக நாம் அவரது வாழ்க்கை வரலாற்றில் படிக்கின்றோம் காளிகோயில் மாடியிலிருந்து, "சீடர்களே வாருங்கள். தாமதியாது வாருங்கள்" என்று கூவியழைத்தாராம்.

இப்படியே யோக சுவாமிகள் குருவாகிய செல்லப்பாசுவாமிகளும் அரும்பணியாற்றியிருக்கின்றார். அவர்கள் சாதாரணமாகப் பார்ப்பவர்க்கு ஒருபணியும் ஆற்றவில்லை என்று தோன்றக்கூடும். ஆனால் யோகசுவாமிகளை உலகுக்குக் கொடுத்ததிலும் பார்க்க வேறெந்தச் சிறந்த பணியை அவர்கள் உலகத்துக்குச் செய்திருக்கக் கூடும்.

யோகசுவாமிகளும் தாம் பெற்ற ஞானச் செல்வத்தைத் தகுதிவாய்ந்த சீடர்கட்குக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாயிருந்திருக்கின்றார்கள். அவர்களிடம் சீடர்கள் பல பாகங்களிலிருந்தும் வந்தார்கள். அவர், அவர்களுக்கு ஏற்றமுறையில் உபதேசம் செய்தார்கள்.

கருமார்க்கம்

யோக சுவாமிகள் மேற் கூறப்பட்ட பெரும்பணியோடு யாழ்ப்பாண மக்கள் மீது கொண்ட அன்பினால் சில சமூகப்பணிகளையும், காலத்திற்குக்காலம் செய்துள்ளார்கள். இவற்றைப் பற்றி ஆராயமுன் அவர்கள் கருமத்தை எப்படி ஆற்றவேண்டுமென்று கூறியதை இங்குஎடுத்துக்காட்ட விரும்புகின்றேன்.

(6-ம் பக்கம் பார்க்க)

என்றும் வாழும் புலவர்

"காதுக்குக் காதாயும் மனதுக்கு மனதாயும் வாக்குக்கு வாக்காயும் உள்ளது எதுவோ அதுவே பிராணனுக்குப் பிராணனுயும் கண்ணுக்கு கண்ணுயும் உள்ளது. அதை அறிந்த தீரர்கள் எல்லாப் பற்றுக்களையும் இங்கேயே ஒழித்து இவ்வுலகைவிட்டுச் சாகாத்தன்மை எய்துகின்றனர்"

'அன்னை பிதா குருவாகி ஆண்டு கொண்ட தெய்வம்'

திருமதி கண்மணியம்மா கனகரத்தினம் —

"எல்லாஞ் சிவன்
செயலென்றேத்திப்
பணிவார்க்குப்
பொல்லாங்கு முண்டோ
புத்தியுடன் வாமனமே
"எல்லவர்க்கு நல்ல
னென்று சொல்லு
சிவமே

எல்லாஞ் சிவன்
செயலாய்ச் சொல்லு
சிவமே'

எங்கள் கண் கண்ட தெய்வமாகிய "யோகசுவாமிகள் எங்களுக்களித்த நற்சிந்தனையென்னும் நல்லமுத மலரில், பல இடங்களில் இவ்வாறு "எல்லாம் சிவன் செயல் என்னுந் திருமொழிகள் வரக் காண்கின்றோம்.

ஒரு சமயம் நாங்கள் சுவாமிகளின் சந்நிதானத்தில் இருந்தபோது "ஒரு பிள்ளைக்கு 'சிவன் செயல்' என்று பெயர் வைக்கவேண்டும் 'சிவன் செயல்' என்று கூப்பிட்டவுடன் அது ஓடி வரவேண்டும்" என்று திருவாய் மலர்ந்தருளினர். நாங்கள் எங்களுக்கே அந்தவரம் அமைந்ததாக மகிழ்வுற்று அடுத்த குழந்தை ஆணுயினுஞ் சரி பெண்ணுயினுஞ்சரி 'சிவன்செயல்' என்றே பெயரிடுவதென்று தீர்மானித்துவிட்டோம். இது நடந்து சரியாக ஓராண்டில் எங்களுக்குப் பெண் குழந்தை பிறந்தது, 'சிவன் செயல்' என்றே பெயரிட்டோம். அதன்பின் எங்கள் சீவியத்தில் முன்னிலும் பார்க்க எவ்வளவோ சாந்தம் நிலவிற்று. குழந்தை 'சிவன் செயலா'கவே வளர்ந்து அவளின் வாழ்க்கையுஞ் 'சிவன் செயல்' ஆகவே அமைந்து சிவன் செயலால் சந்தோஷமாக வாழ்கிறார்கள்.

அடுத்தது ஆண்குழந்தை. "சிவதொண்டனென்னும் சின்னக்குழந்தை" என்று நற்சிந்தனையில் அமைந்த அடிகளைக் கண்ணுற்று 'சிவதொண்டன்' என்றே பெயரிட்டோம். சுவாமிகள் பெரும் மகிழ்வோடு இப்பெயர்களைப்பற்றிச் சம்பாஷித்திருக்கிறார் என்று கேள்வியுற்றோம். எங்கள் தெய்வத்தின் திருவடிகளே சரணம்

"அஞ்சி மிக வழியறியா
தயர்ந்து மனந்துடித்து
ஆறுக விழி பெருக
அலமந்து வாடித்
தஞ்ச மென்ற எளிய
னெனை அஞ்சலென்று
காத்த
தவஞானக் குருவடிவம்
காட்டி வைத்த நாடே

சுவாமிகள் தம்மை ஆண்டருளிய தெய்வத்துக்கு அர்ப்பணித்த இவ்வடிகள் உலக சீவியத்தில் இன்னலுற்ற எம்போன்ற அடியார்கள் பலருடைய உள்ளத்திலும் ஆறுதலளிக்கக் கூடியதாகஅமையும். அடியேனுக்கும்ஒரு சமயம் இந்த அனுபவம் ஏற்பட்டதுண்டு.

தகப்பன் கொழும்புக்கு மாற்றலாகிச் செல்ல நான் பிள்ளைகளோடு இங்கே தங்கியிருக்க நேர்ந்தது. அப்பொ

(6-ம் பக்கம் பார்க்க)

நற்சிந்தனை உபநிடதசாரம்

—'அர்த்தநாரீஸ்வரன்'—

யோகசுவாமிகள் இயற்றிய நற்சிந்தனைப் பாடல்கள் பலஉபநிடதசாரமாகக் காணப்படுகின்றன. 'அவனன்றி ஓரணுவும் அசையாது' என்னும் பேருண்மையைக் கூறும் நற்சிந்தனைப் பாடல் ஒன்றும் அதே கருத்தை விளக்கும் கேனே உபநிடத மந்திரங்கள் சிலவும் கீழேகொடுக்கப்படுகின்றன. இரண்டுக்குமுள்ள ஒப்புமை உதிர நோக்கத்தக்கது.

நற்சிந்தனை

கண்ணுலே காணுணுத்து கண்ணுக்குக் கண்ணுயுள்ளது
காதாலே கேட்கொணுத்து காதுக்குக் காதாயுள்ளது
கையாலே எடுக்கொணுத்து கைக்குக் கையாயிருப்பது
காலாலே நடக்கொணுத்து காலுக்குக் காலாயுள்ளது
வாயாலே பேசொணுத்து வாய்க்கு வாயாயிருப்பது
மனத்தாலே எண்ணுணுத்து மனத்துள் மனதாயிருப்பது
மூக்காலே முகரொணுத்து மூக்குக்கு மூக்காயிருப்பது
முன்னெடு பின்னில்லா முதலது மூப்புப் பிணியில்லா வடிவது
தாயுந் தந்தையுமான் வருவது தானே தானுய தழைத்து நிற்பது.
ஒன்றிரண்டென ஒதவொணுதது ஒளியராலும் எழுதவொணுதது
நன்றுதீதிற்கு நடுவாய் நிற்பது ஞானியர் நெஞ்சில் என்றுமுள்ளது
வேதாந்த சித்தாந்தம் வெறெணுணை நாதாந்த முடிவில் நடனம் புரிவது.

கேனே உபநிடத மந்திரங்கள்

சிஷ்யன்: எவரால் விருப்பப்பட்டும் ஏவப்பட்டும் மனம் விஷயங்களில் விழுகின்றது? எவரால் ஏவப்பட்டு முக்கியப் பிராணன் தன் தொழிலில் பிரவேசிக்கின்றது? எவரால் விருப்பப்பட்டு ஜனங்கள் இம்மாதிரி வார்த்தைகளைப் பேசுகிறார்கள்? எந்தத்தெய்வம் கண்ணையும் காதையும் தத்தம் தொழிலில் ஏவுகிறது?

குரு: காதுக்குக் காதாயும், மனதுக்கு மனதாயும், வாக்குக்கு வாக்காயும் உள்ளது எதுவோ அதுவே பிராணனுக்கு பிராணனுயும், கண்ணுக்கு கண்ணுயும் உள்ளது. அதை அறிந்த தீரர்கள் எல்லாப் பற்றுக்களையும் இங்கேயே ஒழித்து, இவ்வுலகைவிட்டுச் சாகாத்தன்மை எய்துகின்றனர். அங்கே கண் செல்லாது, வாக்குச் செல்லாது, மனமும் செல்லாது. அதை நாம் உள்ளபடி அறியமாட்டோம்; ஆகையால் அதைப் பற்றி உபதேசிக்கும் வகையும் தெரியவில்லை; அது அறிந்த பொருள்களைவிட வேறு, அறியாத பொருள்களுக்கும் அப்பாற்பட்டது என்றிவ்வாறே இவ்விஷயத்தைக் கூறிய பூர்வாசிரியர்களிடம் கேட்டுள்ளோம்.

எது வாக்கால் விளக்கப் பெறுதோ, ஆனால் வாக்கு எதனுல் விளக்கப்பெறுமோ அதுவே பிரம்மம் என்று நீ அறி, எதை இது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று.

எதை ஒருவன் மனதால் உணருவதில்லையோ, ஆனால் மனது எதனுல் உணரப்பெறும் என்று கூறுகிறார்களோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று. எதை ஒருவன் கண்ணால் பார்ப்பதில்லையோ, ஆனால் கண்களை எதனுல் பார்க்கிறானே, அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இதை பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று.

எதை ஒருவன் காதால் கேட்பதில்லையோ, ஆனால் காது எதனுல் கேட்பதாகிறதோ அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று.

எதை ஒருவன் மூக்கால் பிராண வாயுவால் முகர்வதில்லையோ, ஆனால் மூக்கு பிராணவாயு எதனுல் முகர்வதாகிறதோ, அதுவே பிரம்மம் என்று நீ அறி. எதை இது பிரம்மம் என்று உபாசிக்கிறார்களோ அது பிரம்மம் அன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோக சுவாமிகளின் அதீத அநுபூதிச் செல்வம்

— ஏ. இ. தம்பர் —

இந்த ஞானகுரு பரம் பரையிற்தோன்றி, கொழும் புத்துறையில் வசித்த யோகசுவாமிகளின் ஆசான் செல்லப்பாசுவாமிகள் எனப்படுவார். இவர் பித்தர் போல் வேடம் பூண்டு நல்லூர்க்கந்த சுவாமி கோவில் தேர் முட்டியிலும் அதற்கருகிலிருந்த குடிசையிலும் வசித்தார். இவர் உலகை மறந்து முற்றுந்துறந்த பிரம ஞானியாக விருந்தார்.

"பிச்சைக்கே இச்சித்து
பித்தனேப்போல் திரிந்த
அச்சமில்லா ஆசானே
அன்பு செய்ய வா
மனமே"
—நற்சிந்தனை

யோக சுவாமிகள் வாலிபப்பிராயம் கடந்து வீரஞ் செறிந்த இளைஞனாக உலாவிய காலத்தில் சுவாமிகள் 'ஆசான்' என்று வர்ணித்த அவர் குருவாகிய செல்லப்பா சுவாமிகளைக் காத்தி ராப்பிரகாரமாகச் சந்தித்த சந்தர்ப்பத்தை சுவாமிகள் பின்வருமாறு வர்ணிக்கிறார்.

"ஆசானைக் கண்டேன்
அருந்தவர் வாழ்
நல்லூரிற்
பேசாதன வெல்லாம்
பேசினேன் - கூசாமல்
நின்றேன் நீ யாராடா
வென்றே அதட்டினனன்
அன்றே யான் பெற்றேன்
அருள்"

அன்றுமுதல் தன் உற்றார் உறவினர், சுற்றத்தார் யாவரையும் மறந்து ஆசானுக்கு அடியானாய் திருநல்லூரில் ஆத்மீக சீவியத்திற்குத் தன்னை அர்ப்பணித்து தவத்திலும், தியானத்திலும், செல்லப்பா சுவாமிகளின் குருசம்பிரதாயத்திற்கு இணங்கியும் வாழ்ந்தார். சரியை, கிரியை, யோகம் என்ற நீண்ட பாதையில்லாமல் இவரின் தீவிரசக்தியினாலும், ஒளியினாலும், ஞானகுருவின் நோக்காலும் சுவாமிகளின் உள்ளம் மலர்ந்து, ஞானத்தையும், சிவானுபூதியையும் பெற்றார் எனக் கருதஇடமுண்டு. யோக சுவாமிகளின் ஆசான் என்றும் ஆனந்த பரவச நிலையில் வாழ்ந்த பரமஞானி. இதனை "ஆனந்த நடனம் ஆடினன், அல்லும் பகலும் நல்லூர் வீதியிற் செல்லப்பன்" எனப்பல்லவியாக அமைத்துப்பாடினர், யோக சுவாமிகள்.

செல்லப்பா சுவாமிகளின் அடிச்சுவட்டில், சீடர்களாக யோக சுவாமிகளும் இரண்டொருவரும் வாழ்ந்த காலத்தைப் பற்றிய விவரமான வரலாறு எமக்குக் கிடைக்கவில்லை. ஆயினும் சுவாமிகள் பிற்காலத்திற் கூறிய சில சம்பவங்களே நினைவுக்கு வருகின்றன சுவாமிகளும், குருவும், சீடர்களும் அந்த இடத்தில் அல்லும் பகலும் தீவிர மோன நிலையில் அநுபூதிப்பித்தர்களாய் வாழ்ந்தார்களென்பதிற் சந்தேகமில்லை. சில தினங்களில் சீடர்கள் தேர் முட்டியிற் தியான நிஷ்டையில் இருந்ததாகவும், தாங்கள் அந்நிலையில் ஆனந்தக் களிப்பிலிருக்கும் போது தங்கள் குரு அயலில் தன் குடிசையில் தியானத்திலிருந்து விழித்து உரத்த தொனியில் சிரிப்பதும், சீடர்கள் அதைக்கேட்டு மகிழ்ந்து மாறிமாறியாகச் சிரிப்பதும் அவர்களின் ஆனந்தக் களிப்பின் பாவனையில் ஒன்றாகும்.

"சிரிப்பார் களிப்பார்
தேனிப்பார்
திரண்டு திரண்டு
உன் திருவார்த்தை
விரிப்பார் கேட்பார்
மெச்சுவார்
வெவ்வேறு இருந்து உன்
திருநாமம்
தரிப்பார் பொன் அம்
பலத்து ஆடும் தலைவா
என்பார்....."

என சிவனடியார்களின் ஆனந்தக் களிப்பை மணிவாசகப் பெருமான் மேற் கூறிய செய்யுளில் வருணித்தமைக்குப் பொருந்தும்.

சுவாமிகளின் குருவையும் அவரின் சாதனைகளையும் திருவாக்குகளையும் பற்றி ஒரு வரலாறும் கிடைக்கவில்லை. ஆயினும் சுவாமிகளின் "நற்சிந்தனை" யில் அவர் குருவைப்பற்றிச் சில குறிப்புகள் காணப்படுகின்றன,

"தேரடியில் எந்நாளும்
இருப்பான் ... ஆசான்"
"தெருவாலே வருவாரைப்
போவாரை வைவான்"
"ஆரடா நீயென்றே
அதட்டி... ஆசான்"
"அன்பிலான் போலவே
துன்புறுத்தி நிற்பான்"
"அப்படியே உள்ளதெனச்
சொல்லி.., ஆசான்"
"அந்தரங்க மாகவே
பேசிக் கொண்டிருப்பான்"
"ஒரு பொல்லாப்பு மில்லை
யென்று சொல்வான்
- செல்வன்
உல்லாசமாகவே
நல்லூரிற் செல்வான்
குருசீட முறை
யொன்றுங் கொள்ளான்
- செல்வன்
ஆரறி வாரென்
றதட்டியே வெல்வான்
அருவென்றும் உரு
வென்றும் சொல்வான்
- செல்வன்
ஆரறி வாரென்
றதட்டியே வெல்வான்."

செல்லப்பா சுவாமிகள் சமாதி அடைந்த பின், அவரின் சீடர்களும் அடியார்களும் பிரிந்து பலவிடங்களுக்கும் சென்றனர். யோக சுவாமிகள் கொழும்புத்துறையிலிருந்த கோவிலுக்கு

(5-ம் பக்கம் பார்க்க)

யோக சுவாமிகளுடன் சில அனுபவங்கள்

— மு. மயில்வாகனம் —

ஒரு ஞானியினுடைய உள்ளம் பெருங்கோயிலாகும். அவருடைய சீவன் சிவனுக அவர் உள்ளும் புறமும் சிவனையே பார்த்திருப்பார். அவருக்கு விருப்பு வெறுப்பில்லை. இறைவன் அன்பொன்றையேநாடியிருப்பர் பித்தர், பிசாசர், பேயர், குழந்தைகளுடைய கொள்கைகளை உடையவராகத் தோன்றுவர். அவருடைய செயலெல்லாம் சிவச்செயலாகும். அத்தகைய ஞானியாகவே விளங்கினர் எங்கள் கொழும்புத்துறை முனிவர் யோகசுவாமிகள். பூர்வபுண்ணிய வசத்தினால் சிறியேன் நாற்பது வருடங்களுக்கு முன் அவருடன் தொடர்பு கொள்ளும் பேறு கிடைத்தது. அவருக்கு அடிமை பூண்டு வாழுங் காலத்தில் கண்ட சில அனுபவங்களைக் கீழே தருகின்றேன்.

அவரைச் சிறியேன் முதலில் சந்தித்தது யாழ்ப்பாணம் சூசையப்பர் அச்சுநிலையத்துக் கருகாமையிலாகும். கண்டவுடன் இரு கரங்களையும் கூப்பிவணங்கினேன். அவர் சூரியனைச் சுட்டிக் காட்டி; "சூரியபகவானுந் தன் தொழில் புரிகின்றான். நானும்என்னுடைய கடமையைப் புரிகின்றேன் எனக் கூறினர். பின் சம்பத்திரிசியார் ஆலயத்துமுன் பாகச் செல்லும் பொழுது "இதுவும் ஓர் இறைவன் சந்நிதானம். இறைவனைக் கும்பிடுவோம்" என்றனர். அவரைப் பின் தொடர்ந்தேன். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கருகாமையிலுள்ள ஒரு தேநீர்க்கடைக்குச் சென்று முதலாளியுடன் பேசிக் கொண்டிருந்தார். கடையின் ஒருபுறத்தில்நல்ல இரதவாழைப்பழகுலை தொங்கவிட்டிருந்தது. சுவாமிகள் புசிப்பதற்குச் சில பழங்களை விலைக்குப்பெறலாமென எண்ணினேன். உடனே அவர் "நீதான் ஆசைப்படுகின்றாய். இதனை உண்பாயாக என்று கூறி ஒரு பழத்தைப் பிடுங்கி என்னிடம் நீட்டினர். சிறியேன் வியப்படைந்து மௌனமாக பழத்தைப் பெற்றேன்.

நல்லூர்க்கந்தசுவாமி கோயிலில் ஒரு தினம்தைப் பூசவிழாத் தரிசனஞ்செய்த பின் சிறியேனும் என்னுடைய உறவினரொருவரும் கொழும்புத்துறையில் யோகசுவாமிகளைத்தரிசனஞ் செய்யச் சென்றிருந்தோம். நேரம் மாலை ஆறுமணியளவிருக்கும். சுவாமிகள் அவருடைய ஆச்சிரமத்துக்கருகிலுள்ள வீதியில் உலாவிக் கொண்டிருந்தனர். "இன்று ஒரு புண்ணியகாலம். பதஞ்சலிவியாக்கிரபாத முனிவர்களுக்குக் கனகசபையில் சிவபெருமான் தமது பஞ்ச கிருத்திய நடனத்தைக் காண்பித்ததினம். நாங்களும் அத்தரிசனத்தை இப்பொழுது காண்போம் என்று கூறியபின் கர்ப்பூரக்கட்டிகளைக் கொண்டுவந்து பக்கத்திலுள்ளபிள்ளையார்கோயில் தென்புறத்திலுள்ள மதிலில் கிட்டத்தட்ட பத்தடிக் கொன்றாக அடுக்கி அவற்றைக் கொளுத்தினர். ஒவ்வொரு தீபத்துக்குமுன்பாக பூமியில் விழுந்து அட்டாங்க நமஸ்காரஞ் செய்தனர். அங்ஙனம்வழிபடும்பொழுது அவர் திருவாய் மலர்ந்த பாட்டு

'நன்றியை மறந்திடாதே
நானென்று மூனைந்திடாதே
கொன்றென்றுந்
தின்றிடாதே'

இந்தப்பாட்டையே திருப்பித் திருப்பிப் படித்துவழிபட்டனர்.

சிறியேனும் ஒரு நண்பரும் கதிர்காமயாத்திரை செய்துவிட்டு ஒருதினம் சுவாமிகளுடைய ஆச்சிரமத்துக்கு விபூதியும் தீர்த்தமுங் கொண்டு சென்றோம். அவற்றை ஏற்றுக்கொண்டு தாம் நல்லூரிலிருந்து புறப்பட்டுக் கால்நடையாகக் கதிர்காமயாத்திரைசெய்த வரலாற்றைக் கூறினர். மூன்று யாத்திரையில் அவர் பெற்ற அநுபவங்களைக்கேட்பவர்களுக்கு மயிர் சிலிர்க்கும். வரலாற்றை விபரமாக எழுதினால் அது நீண்டகட்டுரையாகும். சுவாமிகள் கதிர்காமத்தலத்தையடைந்து கோயிலுக்குப் பின்புறத்தில்ஒரு நீள்சதுரக் கல்லில் தேக அலுப்பினால் படுத்துறங்கினர். சொற்ப நேரஞ்செல்ல ஒரு தேள் அவர் உடலில் கொட்டிவிட்டது. துடித்தெழுந்துசுவாமி சந்நிதானத்தை யடைந்தனர். கொழும்பிலிருந்து சில செட்டிப்பிள்ளைகள் யாத்திரைக்கு வந்திருந்தார்கள். அவர்கள் மாணிக்ககங்கையில் தீர்த்தமாடி தோய்த்துலர்ந்த வஸ்திரம் தரித்துக் கொண்டு சுவாமி சந்நிதானத்தில் கர்ப்பூரத்தை ஏற்றி கதிரைமலைசெல்ல உத்தரவு பெறும் சமயம். உத்தரவு கிடைத்தபின் யாவரும் கதிரைமலையேறப் புறப்பட்டார்கள். சுவாமி அவர்களைப் பின்தொடர்ந்தனர். அக்காலத்தில் கதிரைமலை யாத்திரை மிகக் கடினமானதாகும். செப்பமான பாதையில்லை. மலைச்சாரல் முழுவதும் அடர்ந்தகாடு. சிறிது தூரம் சென்றபின் அவர்கள் வழிதெரியாது திண்டாடினர்கள். அதன்பின்பு சுவாமிகளே அவர்களுக்குக் கதிரைமலை உச்சிவரையும் வழிகாட்டினர். சுவாமிகள் கதிரைமலையாத்திரை முடிந்தபின்புகொழும்புக்குப் புறப்பட்டனர். அங்கு சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள்வீட்டுக்குச்சென்றுஅவர்கொடுத்த பணத்தைப் பெற்றனர். பின்பு யானைக்குட்டிச்சுவாமியைக் காண விரும்பினர். யானைக்குட்டிச்சுவாமி சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களாலும் சேர் பொன்னம்பலம் அருணாசலம் அவர்களாலும் போற்றப்பட்டு வந்தவர். அவர்கள் ஒவ்வொருவரும், இந்த நாட்டுக்கும் அந்த நாட்டுக்கும் இராசாவென அச்சுவாகிகளால் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள். சுவாமிகள்யானைக்குட்டிசுவாமிகளைப் பார்த்த சமயம் சில பிள்ளைகள்அவரை ஒரு வண்டியில் ஏற்றி இழுத்துக்கொண்டுசென்றார்கள். சுவாமிகள் அவரைச் சந்தித்து அவருடைய கையில் ஓர் 'ஐந்துசத நாணயத்தை தும்பிக்கை இது நம்பிக்கை எனக் கூறிக்கொடுத்தனர்.

வண்ணார்பண்ணையில் முன்னிருந்த விவேகானந்தா அச்சுயந்திரசாலையிலும் முத்துக்குமாரசுவாமிச் செட்டியார் வீட்டிலும் சுவாமிகள் புராண படனம் நடத்தி வந்தனர். யாழ்ப்பாணத்திலுள்ள உரையாசிரியர்களும் பண்டிதர்களும் அப்புராணபடனத்தில் பங்கு பற்றினர். அவர்களுளொருவர் வடமொழி தென்மொழி விற்பன்னர், வட்டுக்கோட்டை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண சுவாமிகள். அவருடைய உரை சுவாமிகளுடைய உள்ளத்தைக்கவர்ந்தது. 'கந்தனைப் பயந்தநாதன்' என்ற சொற்றொடருக்கு மூன்று மணித்தியாலம் கடல் மடை திறந்தது போல விரிவுரைநிகழ்த்தினர் என சுவாமிகள் கூறி அவருடையகல்வித்திறமையைப் பாராட்டினர்.

படிப்பு நிகழ்ந்த சிலதினங்களுக்குப்பின் அப்பலவாண சுவாமிகளைச் சிறியேன் கண்டபொழுது அவர் கூறியதாவது, "மயில்வாகனம் யோகசுவாமிகளிடத்தில் காஷாயமில்லை. விபூதி உருத்திராக்ஷதாரணமில்லை. அப்படியிருந்தாலும் யாழ்ப்பாணத்திலுள்ள பெரியமனிதர்கள், நீதவான்மார், அப்புக்காத்துமார், பிறக்ருசிமார் யாவரும் அவரை வணங்கினர்களே. என்ன அதிசயம். இதன் இரகசியம்யாதெனில் அவரிடத்தில் நிராசையும் கடவுள் பக்தியும் நிரம்ப உண்டு. அவையே அவருடைய துறவு வாழ்க்கையைச் சிறப்பிக்கின்றன."

ஒருமுறை யோக சுவாமிகள் கந்தவனக் கடவைக் கந்தசுவாமிகோயில் கிழக்கு மடமொன்றில் பலஅடியார்களுடன் வீற்றிருந்தார். சச்சிதானந்த யோகீஸ்வரர் என்றழைக்கப்படுகின்ற சங்கர சுப்பையரும் திக்கம் செல்லையாபிள்ளை அவர்களும் அக்கூட்டத்திலிருந்தனர். "நவாலியூர் சோமசுந்தரப்புலவர் இயற்றிய கந்தவனநாத நான்மணிமாலையையும் பதிகத்தையும் அரங்கேற்றுவோம் எனச் சுவாமிகள் கூறினர். பிரபல இசைவள்ளல் வை. இராமநாதன் அவர்களை அந்நூலைப் படிக்கும்படி சுவாமிகள் கட்டளையிட்டனர். கேட்டவர்கள் மனம் உருகும்வண்ணம் செய்யுட்களுக்குப்பொருத்தமான இராகங்களில் அவர் ஓதினர். செய்யுட்களின் பொருட்சுவையிலும்பக்திச் சுவையிலும் இசைச்சுவையிலும்யாவரும் திளைத்திருந்தனர். அத்தருணம் ஒருமயில், சுவாமி சந்நிதானத்தில் அடியார்களுடைய ஆர்வமும் அன்பும் பெருக இறகுகளை விரித்தாடிற்று. சுவாமிகள் அதனைப்பார்த்துவிட்டு "இத்தெய்வப்புலவனுடையபாட்டைப்படிக்கும் பொழுது மயில் வந்தாடுந்தானே." என திருவாய் மலர்ந்தனர்.

"ஒரு பொல்லாப்புமில்லை"

முழுதும் உண்மை யோக வாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த பூமி பெரிய தவஞ்செய்த பூமி!"

— சேர் வைத்திலிங்கம் துரைசாமி

"எண்ணிறந்து
எல்லே இலாதானே
நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன்
புகழுமாறென்றறியேன்..."
— திருவாசகம்.

சுவாமிகளுடன் நீண்ட காலம் தொடர்பு கொண்டவர் சேர் வைத்திலிங்கம் துரைசாமி அவர்கள். ஆகவே சுவாமிகளின் முதலாவது புண்ணிய திதி சமயத்தில், ஏதாவது செய்தி அளிப்பீர்களா என்று டெலிபோனில் சேர் அவர்களைக் கேட்டேன்.

"வயது 90-க்கு மேல் ஆகிவிட்டது. புத்தியும் தெளிவில்லை. என்ன செய்தியைச் சொல்ல" என்றார். ஒருவர் தமக்கு புத்தி தெளிவில்லை என்று கூறுவதாயின், அவரது புத்திமிக மேலாக இருப்பதற்கு அது ஓர்அடையாளமாகும். நமக்கு ஒன்றுமே தெரியாது என்பதை யார் எப்போது தெரிந்து கொள்ளுகிறார்களோ அப்போது அவருக்கு இந்த ஜன்மத்திலே தெரிய வேண்டியது தெரிந்துவிட்டதென்பார் சுவாமி ராமதாஸ் அவர்கள். "நாமொன்று மறியோம் என்பதுஸ்ரீயோக சுவாமிகளின் ஆப்தவாக்கியங்களில் ஒன்றுகுமல்லவா?

இதை அவரிடம் சொன்னதும், அவர் சிரித்துவிட்டு நேரில்வருமாறும், ஏதாவது சொல்லலாமென்றும் கூறினர். சென்றேன். அதுமாலை நேரம். அருள் சுரக்கும் இன்முகத்துடனே வரவேற்று, பக்கத்தமர்த்தி, ஏதாவது கேளுங்கள் சொல்லுகின்றேன் என்றார்கள்.

கே:- தங்களுக்குஸ்ரீசுவாமிகளுடன் எப்படி முதல்முதலாகத் தொடர்பு ஏற்பட்டது?

ப:- 1921-ம் வருடத்திலே இலங்கையின் முதல் சீர்திருத்தசபைக்கு, வடமாகாண தேர்தலில் ஓர் அபேட்சகராக முன்வந்தேன். தேர்தலில் ஸ்ரீ சுவாமிகளின் ஆசியைப் பெற ஒரு சிநேகிதருடன் சென்றேன். அது அக்டோபர் மாதம். மழைகாலம். ஸ்ரீ சுவாமிகள் இருந்த சின்னக்கொட்டிலில் தரை எல்லாம் ஒரே ஈரம். ஒரு பலகை போட்டிருந்தனர். பயந்து பயந்துதான் சென்றேன். அவருக்கு அப்போது ஒருவித தெய்வீக விசர். என்ன பேசுவாரோ என்று மனதில் பயம். வணங்கிவிட்டு, பலகையில் அமர்ந்தோம். நாம் ஒன்றும் பேசப்படாது. அவர்தான் பேசினார். அவர் பேசினது ஒன்றும் மனதில் பதியவில்லை. ஆனால் கடைசியாக, ஓர் எலுமிச்சம்பழத்தைக் கொடுத்தார். அதை ஒரு பிரசாதமாகக் கருதி, சந்தோஷமாகத் திரும்பினேன்.

இதைக் கேட்டதும் எனக்கு முதல்முதலாக ஏற்பட்ட அனுபவம் நினைப்பு வந்தது. ஒரு பிரமுகருடன் ஸ்ரீ சுவாமிகளை தரிசிக்க, பழம் முதலியவற்றுடன் முதல்முதலாக அதிகாலையில் கொழும்புத்துறை ஆசிரமத்துக்கு சென்றபோது, அறைக்குள்ளிருந்தே, "நேரமில்லை. நேரமில்லை. போகலாம்... என்று ஆங்கிலத்தில் உரக்கக் கூறினர். ஏற்கெனவே பயந்து பயந்து சென்ற எனக்கு இதைக் கேட்டதும் சப்த நாடியும் தளர்ந்தது. மிகச்சோர்ந்த மனதுடன் திரும்பிவிட்டேன். பாவம் என்னை அழைத்துச்சென்ற பிரமுகருக்கும் மிக ஏமாற்றம்.

பெரிய பாவம் செய்ததால்தான் அப்பெரியவர் இப்படிவிரட்டிவிட்டாரென்றும் எண்ணி எண்ணிக் கண்ணீர் விட்டேன். மறுநாள் காலையில் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்தியாலய அதிபர் ஸ்ரீ அம்பிகைபாகன், ஊரைக்காட்டுவதாகக்கூறி, என்னை காரில் அழைத்துச் செல்லுகையில், திடீரெனக் காரை நிறுத்தி "சுவாமிஇருக்கிறார், இறங்கி வாருங்கள் என்று அழைத்தார். மரணதண்டனை விதித்தது. இந்திய ஹைகமிஷனர் கூபர், வெளிநாட்டு அன்பர்கள் முதலியவர்களை சுவாமியிடம் அழைத்துச் செல்ல நேரிட்டது. ஒரு சிவராத்திரி. ஸ்ரீ சுவாமிகளை தரிசிக்குமாறு கொழும்பிலிருந்து ஓர் அன்பர் எழுதியிருந்தார். ஆனால்சிவராத்திரியன்று எல்லாரையும் சிவதொண்டன் நிலையத்துக்குச் செல்லுமாறு அவர் கூறுவாரென்றும் யாரையும்பார்க்க மாட்டாரென்றும் அறிந்தும், கொழும்புத்துறைக்கு ஓர் அன்பருடன்சென்றேன். மூன்றுமணி நேரத்துக்கு மேலாக, அந்த உத்தமசிவத் தொண்டருடனிருந்து, அப்புனித இரவைக் கழிக்கும் பெரும்பேறு கிடைத்ததை என்றும் மறக்கமுடியாது.

மன்னிக்க வேண்டும். எங்கோ ஆரம்பித்து ஏதேதோ எழுதிவிட்டேன்.

ஸ்ரீ சுவாமிகளைப் பற்றி தாங்கள் அறிந்துகொண்டதென்ன? என்று அடுத்தபடி கேட்டதற்கு, சேர் வைத்திலிங்கம் அவர்கள், "ஒன்றும் அறிந்து கொள்ளமுடியவில்லை. 43 வருட அனுபவம் தான், அநேகமாக தினசரி அவரைப் பார்ப்பேன். அவரிடம் செல்வேன். அவரும் இங்குவருவார். அவர் பெரிய மகான் என்பது என் மனதில் பதிந்த அலுவல். அவருக்கு எல்லாரும் ஒரேமாதிரிதான். ஒரு வித்தியாசமுமில்லை. எல்லாரிலும் ஒரே அன்பு, தமிழ்-சிங்களம் போன்ற எவ்வித வித்தியாசமுமில்லை" என்றார்.

ஒரு சமயம் அடியேன் ஸ்ரீ சுவாமிகளைக் காணச் சென்றபோது, "ஆயுபவன். புத்தங் சரணங்கச்சாமி, தர்மங் சரணங்கச்சாமி, சங்கங் சரணங்கச்சாமி... என்று கூறி சிங்களவன் நல்லவன். புத்தன் மகா பெரியவன்..." என்றெல்லாம் சொன்னார். "தமிழனுக்கு இன்னும் அடிவிழவேண்டும். அப்போதுதான் புத்தி வரும்..." என்றார். அது சத்தியாக்கிரகம் நடந்து கொண்டிருந்தகாலம். அவர் பேச்சுஒன்றுமே புரியவில்லை.

ஹைகமிஷனர் கூபர், ஸ்ரீ சுவாமிகளை வணங்கி பயபக்தியுடன் அமர்ந்ததும், ஸ்ரீ சுவாமிகள், "நீங்களும் நானும் ஒன்று. எல்லாம் ஒன்றேதான்... என்று கூறி, அங்கு சென்ற நால்வரிடமும், நான்கு பெரிய மாதுளம் பழங்களை, "அப்பர், சுந்தரர், சம்பந்தர், மாணிக்கவாசகர் என்று ஒவ்வொரு பெயராகச் சொல்லி நால்வரிடமும் அளித்த அன்புக் காட்சி என்மனதில் அப்படியே பதிந்துள்ளது.

ஒரு சமயம் ஓர் அன்பர் "சுவாமி! 12 ஏக்கர் நிலம் வாங்கியுள்ளேன் என்று பெருமையாகச் சொன்னராம். அதற்குஸ்ரீ சுவாமி அவர்கள் என்ன கூறினார் தெரியுமா? "அட அவ்வளவுதானா! உலகத்திலுள்ள நிலமெல்லாம் என்னுடையது என்று கூறி அந்த அன்பரின் தற்பெருமையை அடக்கிவிட்டாராம். "நம்வீட்டுக்கு யாராவது திடீரென நான்கு பேர் வந்துவிட்டால் அவர்களுக்கு உணவளிக்க திகைத்துப் போகிறோம். ஆனால் ஸ்ரீ சுவாமிகளோ, திடீரென எவ்வளவு பேர் வந்தாலும் அவ்வளவுபேருக்கும் உணவளிக்கின்றார். எங்கிருந்தோ எல்லாம் வருகின்றன' என்று வியப்புடன் தெரிவித்தார் அந்த அன்பர்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் பரந்தன் ஸ்டேஷனிலிருந்து ரயில் புறப்பட்டுவிட்டதாம். அப்போது ஸ்ரீ சுவாமி அவர்கள் வேகமாகநடந்து, ரயிலுக்கு முந்தியே பரீஸ்டேஷனுக்கு வந்துவிட்டாராம்! நடையிலும் மெத்த வீரன் அவர் என்றார் சேர் வைத்திலிங்கம்.

"இந்த நாடு பெரிய தவஞ்செய்த பூமி! அவர் இங்கு வந்து உதித்து, எங்களுடன் இருந்தது எங்கள் பெரிய தவப்பயன்' என்று சேர் அவர்கள் மிக உணர்ச்சியுடன் கண்களில் நீர் மல்கச் சொன்னார்.

"யாரைக் கோவிப்பதிலும், சந்தோஷப்படுவதிலும் ஒரு வித்தியாசமுமில்லை. ஒருகுற்றமும் சொல்லப்படாது. எல்லாம் நன்மைக்கே. நடப்பது நம் நடையல்லவே. அது நடக்கிறது. அவருக்கு தம் குருவின் மீதுள்ள அன்பு கொஞ்சமல்ல. 'ஒரு பொல்லாப்பு மில்லை. எல்லாம் எப்போதோ முடிந்த காரியம். முழுதும் உண்மை. நாமறியோம் என்ற தம் குருவின் ஆப்தவாக்கியங்களை அடிக்கடி கூறுவார்கள். அவருக்கு நல்ல ஆள் வந்து வாய்த்தது. சந்தசாமிமூலம் பிழைக்கிலே சிவதொண்டன் நிலையமேற்பட்டுள்ளது. அங்கு உற்பத்தியாகும் நெல்லைக் கொண்டுஅன்னதானம்நடக்கிறது. இன்னும் இத்தொண்டுகள் உலகிலே எப்படியெல்லாம் விரியுமோ? என்றார்.

இங்கு கவர்னர் ஜெனரலாக இருந்த சோல்பரிபிரபுவின் திருமகனும், செல்வந்த பிரிட்டிஷ் உயர்குடியில் உதித்தவருமானராம்ண் போதத்தை 'சத்சாமி யாக மாற்றிய, பெரிய உலக அற்புதத்தைப் பார்க்கிறோம். இன்னும் உலகெல்லாம் ஸ்ரீ சுவாமிகளின் புகழும், சிவத்தொண்டும், இப்பெருமகன் மூலம் எப்படி எல்லாம் பரவப்போகிறதோ! யார் அறிவர்!

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிரில் அமர்ந்தார். இத்தக்காலத்தில்சுவாமிகளை அநுபூதிச்சித்தரென்றும் ஆத்மீக ஞானத்தில் ஓர் சிங்கலட்சணம் பொருந்திய சமயகுரு வென்றும் பல இளைஞர்களும் முதியவர்களும் தரிசித்து வணங்கி அவர் அடியிலிருந்து சுவாமிகளின் திருவாக்குகளைக் கேட்டுப் பக்தி செலுத்தி வந்தனர்.

சமயத்தொண்டுகளில் ஈடுபட்டிருந்த தலைவர்கள் சகலரும் சுவாமிகளைத்தரிசித்து அவரின் புத்திமதிகளைத் தழுவுவது வழக்கமாயிருந்தது. யாழ்ப்பாணத்தில் இராமகிருஷ்ணர் விவேகானந்தர் துவக்கிய ஆத்மீக ஜீவ எழுச்சியையும் சமய மறுமலர்ச்சியையும் திறம்நாட்டுவதில் முன்னின்று தொண்டாற்றிய செல்லப்பாமயில்வாகனமும், கந்தையா நவரத்தினமும் சுவாமிகளின் விசுவாச அடியார்களாகத் தொண்டாற்றினர். இவ்விருவரும் சுவாமிகளின் தீவிர ஞான நிலையால் ஆட்கொள்ளப்பட்டு அவரின் அடியார்களானார்கள். இக்காலத்தில் சுவாமிகளைத் தரிசித்தவர்கள் அவர் காலையிலும் மாலையிலும் மௌனத்திலும் தியானத்திலும் ஆழ்ந்திருப்பதைக் காணும் பாக்கியத்தைப் பெற்றனர். அவ

(10-ம் பக்கம் பார்க்க)

"ஐயாக்" எழுதுவது

ஒரு சந்யாஸியின் ஆத்மகீதம் (6ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்ற இராகத்தில் வாசிக்க வேண்டும். எச்சுதியில் எவ்விராகத்தில் வாசிக்கப்படுகின்றதோ அச்சுதியில் அவ்விராகத்திற்றானே பொருள் சொல்லப்படவேண்டும். இலக்கணப் பிழையில்லாமலும், வெளிப்படையாகவும், இன்றியமையாத இடங்களில் விரிவாகவும்பொருள் சொல்லவேண்டும்." புராண படனத்தினால் இலக்கியப் பயிற்சியும், சமய சாத்திர அறிவும், சங்கீத ஞானமும் யாழ்ப்பாணத்தில் வளர்ந்து வந்தன. நாவலர் அவர்கள் காலத்திலும், அவர்கள் மருகர் பொன்னம்பலபிள்ளை காலத்திலும்புராணபடனம் உச்சநிலையிலிருந்தது.

நாவலர் அவர்களுக்குப் பின் புராண படனத்தை வளர்த்த பெருமை யோக சுவாமிகளையே சாரும். சமய வளர்ச்சிக்கு புராணபடனத்தின் இன்றியமையாமையை உணர்ந்த சுவாமிகள் அதற்குப்போதிய ஆதரவு கொடுத்து வளர்த்துவந்தார். வண்ணார்பண்ணையில் முத்துக்குமாரசுவாமிச் செட்டியார் இல்லத்தில் தமதுசந்நிதானத்தில் கந்தபுராணம், பெரியபுராணம், திருவிளையாடற்புராணம், கம்ப இராமாயணம் முதலியவற்றைப்படிக்கச்செய்தார். யாழ்ப்பாணத்திலுள்ள பெரும் வித்துவான்களெல்லோரும் சுவாமிகள் சந்நிதானத்தில் புராணங்களை வாசிப்பதையும் பயன்சொல்லுவதையும் பெரும்பேறாகக் கருதினர்கள். புராண படனத்தில் வித்துவச்சேட்டைகளுக்கிடமிருந்தபோதும், சுவாமிகள் சந்நிதானத்தில் வித்துவான்கள் மாந்திரிகளால் கட்டுப்பட்ட பாம்புகள்போல் அடங்கியொடுங்கித் தமது கைங்கரியத்தைச் செய்தனர்.

திருமுறை ஓதுவித்தல்

சுவாமிகள் திருமுறை ஓதுவதிலும் ஓதுவித்தலிலும் ஈடுபாடுடையவர்களாக விளங்கினர். முறையாக ஓதப்பட்டால் பிணி முதலியன நீங்குமென்றும், நினைத்தகாரியம் கைகூடும் என்றும் கூறுவர். 'இடரினும் தளரினும் என்னும் பதிகம் சுவாமிகள் சந்நிதானத்தில் படிக்கப்பட்ட காலங்களில் பொற்காசுகள் வந்துசேர்ந்ததை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். சுவாமிகளின் உபதேசப்படி கோளறு பதிகத்தை பாராயணம் செய்து பயன்பெற்றவர் பலர்.

சைவப்பிள்ளைகள் தேவாரங்களைப் பண்ணோடு பாடக் கற்றுக்கொள்ள வேண்டும் என வற்புறுத்துவர். அதற்கு வேண்டிய வசதிகளை சிவதொண்டன் நிலையம் போன்றவிடங்களில் ஏற்படுத்தியுள்ளார்கள்.

சிவதொண்டன் நிலையம்

மேற் கூறப்பட்டவை போன்ற பணிகளை நிர்வகித்து நடத்துவதற்கென்றே சிவதொண்டன் நிலையத்தை நிறுவினர்கள். இந்நிலையத்தில் நாடோறும் புராண படனம், திருமுறை ஓதுதல் முதலியன நடைபெற்று வருகின்றன. வார இறுதியில் சித்தாந்த சாத்திர வகுப்புகளும், திருமுறை வகுப்புகளும் நடைபெறுகின்றன. மாதமொருமுறை யாகம் நடைபெறுகின்றது. உலக விவகாரங்களில் ஈடுபடும் மக்களுக்குச் சமயசாதனைகளில் ஈடுபடுவதற்கு இந்த யாகம் ஓர் அரிய சந்தர்ப்பத்தைக் கொடுக்கின்றது.

இப்பொழுது சுவாமிகள் போட்ட திட்டத்திற்கமைய மட்டக்களப்பிலும் ஒரு சிவதொண்டன் நிலையம் நிறுவப்பெற்றிருக்கின்றது. இங்கு கல்வி கற்ற இளைஞருக்கு சமயசாதனைகளிற் பயிற்சிகொடுப்பதோடு, விவசாயத் துறையிலும்பயிற்சி கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. இத்திட்டம் காலத்திற்கேற்றதிட்டமாகும். ஆகையால் நமது இளைஞர்கள் இதைத் தக்கமுறையில் பயன்படுத்திக்கொள்வார்களாக.

சிவதொண்டன் நிலையத்தின் இலட்சியத்தை எடுத்துக்காட்டும் ஒருநற்சிந்தனை பாடலோடுஇக்கட்டுரையை முடிப்பாம்.

சிவதொண்டன் நிலையத்திற் சேரீர்
தியானஞ் செய்து
கடைத்தேறீர்
மவுனமாயிருந்து இளைப்பாறீர்
மந்திரமிதுவெனக் குறியீர்.

எப்பொழுதோ முடிந்த காரியம்

— யோகனாக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓர் நல்ல தோட்டக்காரன் வந்திருக்கிறாரே!"

யோகசுவாமிகளும் ஓர் ஆங்கிலேயரும்

— க. வேலாயுதன் —

இப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் கரும்புத்தோட்டம் என்றழைக்கப்படும் புதுப்பேராதனைத்தோட்டத்தில்கடமையாற்றிவந்தேன். இந்த இடத்தைப்பற்றிக் குருநாதன் ஒருகால் எனக் கெழுதிய கடிதத்தில் "கண்ணைக்கவரும் காட்சியால் நிறைந்து, விண்ணைத் தாண்டும் அிலங்கல் சூழ்ந்த எண்ணிக்கையில்லாப்பேராதனை" எனப்பேராதனையின் அழகையும் காட்சியையும்வியந்துள்ளார்கள்.

இந்த இடத்துக்கு நான் கடமையாற்றச் சென்ற அடுத்த நாள் சுவாமிகள் அடியேன் இல்லத்தை புனிதமாக்கத் தம் அருமந்தசேவடிகள் சேப்ப வந்தார்கள். அன்று தொடங்கி ஒவ்வொருமாதமும் வருவார்கள். வந்தால் மூன்றுநாட்கள் தங்குவார்கள். நான் வசித்து வந்த வீட்டைச் சுற்றி தறுமணம் கமழும் பூக்கள் திறைந்த செடிகள் இருந்தன. சுவாமிகள் வந்து நிற்குங் காலங்களில் எல்லாம், இம்மலர்களைகொய்து சுவாமிக்கென ஒதுக்கிவிடப்பட்ட படுக்கையறையிலுள்ள தெய்வப்படங்களுக் கெல்லாம் சூட்டிக் கர்ப்பூரம்கொளுத்திதூபம் இட்டு, ஆடிப்பாடி ஆனந்தம் கொள்வது வழக்கம். வீட்டில் நானும் எனது வேலைக்காரனுமேயிருந்தோம். அதனால்சுவாமிகள் அவ்வீட்டைத் தமது தவப்பள்ளிபோலாக்கிவைத்திருந்தார்.

இத் தோட்டத்துத் தலைவன் ஓர் ஆங்கிலேயர். இரண்டாம் உலகச் சண்டையில் பட்டாளத்திலைடு போர்புரியுமிடங்களில் சண்டையிட்டுத் தப்பிவந்தவர். கறுப்பு மனிதரைச் சற்றே ஏளனமாக நடத்துபவர். அவர்கள் கட்டுப்பாட்டுடனே நடக்கவேண்டுமென்றுவிரும்புபவர்.

ஒருநாள் சுவாமிகள் காலையில்வீதியில்உலாவிக்கொண்டிருக்கையில் ஆங்கிலேயமுதலாளியும் வந்தார். சுவாமிகளின் பார்வைஅவர்மீது படுதலும் அவர் உள்ளத்தில் ஒரு மாற்றம் ஏற்படத்தொடங்கியது. சுவாமிகளும் 'உன் துரை இவிமேல் அமைதியாயிருப்பார் என்றார். இந்தச் சம்பவம் நடந்த பின்தான் ஒருநாள் சுவாமிகள் பூக்கொய்துநிற்பதைக் கண்டு அவரைப்பற்றி என்னிடம் 'உனக்கு ஓர் அழகான தோட்டக்காரன் வந்திருக்கின்றார் என்று சொன்னார். இதனைச்சுவாமிகளுக்குச் சொன்னதும் பின்வரும் கடிதத்தை ஆங்கிலத்தில் எழுதுவித்து அவருக்குக்கொடுக்கும்படி சொன்னார்.

O! Blessed one!

The heaven sends down the rain, the rain water floods the land. The pondsare filled, the embarkments of the ponds are washed away The water in the ponds overflows the banks. O! My Lord! Let thine Divine Grace mainfest in me as shower of mercy Let this shower fill my pool of life Let the bunds of desires Viz; earth, woman, and gold be washed away Let your shower of mercy enter into the pond O Lord when shall I attain that glorious day!

Love is the shining spring that takes its source from the Mount of life It should flow into the field of heart And there is but one channel But there are many holes there You drain the water of love into the channel but it goes into the lands of materialistic desires It does not reach the field of heart. The channel is blocked by stones of anger, roots of passions and whithered foliage of egoism Hence the course is diverted You have been watering in vain all these years Fill in the holes, clear the blocks, and then water. It rushes into the field and brings in a rich harvest

மேற்படி கடிதத்தின் தமிழாக்கம்:

அன்பனே!

வானம் அமிர்தமான நீரைப் பொழிகின்றது. நீரோ நிலமெங்கும் பரவுகின்றது. குளங்கள் நிறைந்துவிட்டன. அணைக்கட்டுகள் உடைந்துவிட்டன. குளத்து நீர் தேங்கி அணையையும் மீறிப்பாய்கின்றது. இறைவனே, உனது அருள் வெள்ளம் என்னிடத்துக்கு ஊணாக ஊற்றெடுக்கட்டும். உனது கருணை என் வாழ்க்கையென்னும் குளத்தை நிரப்பட்டும். மண், பெண், பொன் என்னும் ஆசைகளாகிய அணைகள் கரைந்தோடட்டும். உமது அருள் வெள்ளம் என்னுள்ளமென்னும் பள்ளத்தில் தேங்கி நிற்கட்டும். ஐயனே! இந்த பொன்னுனநாளை எந்நாள் நான் பெறுவனே!

வாழ்க்கை என்னும் மலை உச்சியில் இருந்து பளிங்கு போன்ற பிரபையாணநீரூற்றுக ஒடிவருவது தான் அன்பு. அத்தத்தூய நீர் என்உள்ளமரம் பள்ளத்திற்பாய வேண்டும். அதற்கு வாய்க்கால் ஒன்றே உள்ளன. ஆனால் அவ்வாய்க்காலில் பல பொந்துகள் உண்டு. அன்பு என்னும் நீரை அந்த வாய்க்கால் வழியேவிடுகின்றாய். ஆனால் அவ்வருமந்த நீரோ ஆசையென்னும் நிலத்திற்கே போய்விடுகின்றது. நீபாய்ச்சும் அன்பு நீர் உள்ளத்தில் சேரவில்லை. அந்தோ! கோபும் என்னும் கற்களும் மோகமென்னும் வேர்களும் அகங்காரம் என்னும் சருகுகளும் இந்த வாய்க்காலை அடைக்கின்றன. ஆகையால் நீர்வேறுபாதையால்சென்று வீணாகின்றது. இவ்வளவு காலமும் பாழுக்கிறைத்து விட்டாய். ஆசைகள் என்னும் பொந்துகளை அடை; கோபம், மோகம், மதம் என்னும் தடைகளை அகற்று. பின் நீரைப் பாய்ச்சு. அப்போது அந்த அன்பு நீர் உன் உள்ளத்தில் செறிந்து பாய்ந்து, ஞானப்பைங்கூழ் செழித்து வளர உதவுகின்றது.

இக்கடிதத்தைப் படித்த ஆங்கிலேயநண்பருக்கு சுவாமிகள்மீது பற்று அதிகரித்தது. அவர் வாழ்க்கையிலும் அமைதி ஏற்பட்டது. உத்தியோகத்திலிருந்து இளைப்பாறி இங்கிலாந்து சென்ற பின்னும் சுவாமிகளின் சுகம் விசாரித்துக்கடிதமெழுதுவார்.

பன்னிரண்டு வருடங்களாக இந்தப்பெருமானின் திருவடிகள் தீண்டப்பெற்ற தோட்டம் தன் பழைய கோலம்போய் இன்று அலை மகளும் கலைமகளும் நடஞ்செய் பெருநகராக இலங்கைப் பல்கலைக் கழகத்துக்கு இருப்பிடமாக விளங்குகின்றது. சுவாமிகள் தங்கிய திருமனையோ விசேடகட்டடவசதிகள் பெற்று இன்றும் ஒரு சைவ அன்பன் வசிக்கும் வீடாக விளங்குகின்றது. ஆங்கிலேயரும் தொழிலாளிகளும் வசித்த இடங்களில் புதுக்கட்டடங்கள் தோன்றியிருக்கின்றன.

ஒரு சந்நியாசியின் ஆத்மகீதம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

"காரியசித்தி எய்தும் வரையும் விடாமுயற்சி செய். நீ ஏன் ஓயாமல் கெட்டகாரியங்களைச் சிந்திக்கிறாய்? அச்சிந்தனையை விட்டு முழுமனத்தோடு தெய்வத்தை வணங்கு. உனக்கு விதிவசத்தாற் பொருந்துவனவற்றை உவகையோடு ஏற்று நடத்து. இறுதியில் யாவும் ஜெயமாகும்.

அது அப்படியுள்ளகாரியம் என்பதைச்சதா நெஞ்சிற் பதித்துக்கொண்டு இயல்பாய் உனக்கு வரும் வேலைகளையும் கடமைகளையும் செய்துகொண்டிரு.— அல்லது அவற்றை விட்டிரு. எதுவும் சரியே.

செய்தலிலும் செய்யாமையிலும் எதுவும் தங்கியிருக்கவில்லை. கருமம் இல்லாமையை விரும்பாதே. கருமத்தைப்பற்றுதே. செய்தல் செய்யாமை இவற்றுள் இயல்பாய் எது உனக்கு அமைகின்றதோ அதையே பற்றி நில்".

மதியைக்கெடுக்கும் மதுபானத்தை மக்கள் அருந்தக்கூடாதென்று இடித்து இடித்துக் கூறுவர். பதினைந்து வருடங்களாகச் சுவாமிகளுடன் நெருங்கிப் பழகிய ஒரு சந்நியாசி ஒரு நாள் மதுவருந்திவிட்டு வந்ததைக்கண்டதும், உடனே அவரின்தொடர்பைஅறுத்து விட்டார். மதுவிலக்குப் பிரசாரத்திற்கும், அதை ஒழிப்பதற்கெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கும் தமது பூரண ஆசியையும், ஒத்துழைப்பையுங் கொடுத்தனர். 1924-ம் ஆண்டுவரையில் நடைபெற்ற மதுவிலக்கு இயக்கத்தில் தமது அன்பர்களை ஈடுபடச் செய்ததோடு, மதுவிலக்குக் காரியாலயத்திற்குத் தினசரி சென்று அங்கு நடைபெற்ற வேலைகளைக் கண்காணித்து வந்தார். இந்த இயக்கத்தினுல் யாழ்ப்பாணத்தில் பல கள்ளுக்கடைகளும் சாராயக்கடைகளும் மூடப்பட்டன.

பின்னர் 1952-ம் ஆண்டிலும் அவர்களுடைய ஆசியுடன் இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இயக்கத்திற்கு வேண்டிய பணத்தைத் தமது அன்பர்களிடமிருந்து பெற்றுக் கொடுத்தனர். இயக்கத்திற்குக் காரியதரிசியாக இருந்த என்னை ஊக்கப்படுத்தும் பொருட்டு பின்வரும் குறளை ஒன்பர் மூலம் எனக்கு அனுப்பி வைத்தார்.

"சூழ்ச்சிமுடிபு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியுள் தங்குதல் தீது"

இந்த இயக்கத்தின்பலனாக பல சாராயக் கடைகள் மூடப்பட்டன. சிறிது காலத்தில் அவற்றுட் சில மீண்டும் திறக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் முன்னெருபோதுமில்லாத அளவுக்குக் குடிப்பழக்கம் யாழ்ப்பாணத்தில் பரவிவருகின்றது. யாழ்தேவி, உத்தரதேவி முதலிய வண்டிகளில் பிரயாணஞ் செய்வோர் இப்பழக்கம் எந்நிலையில் இருப்பதென்பதை நன்கறிவர். சுவாமிகளோடு தொடர்புள்ள சபைகளும், அன்பர்களும் யாழ்ப்பாணத்தை இந்தக் குடிப்பழக்கம் என்னும் ஆபத்திலிருந்து காப்பாற்ற ஆவன செய்வார்களாக!

புராணபடன

புராண படனம் யாழ்ப்பாணத்தில் தொன்று தொட்டு நடைமுறையிலிருந்து வந்தபோதும் நாவலர் அவர்கள்தான் அதை முறைப்படுத்தி வேண்டிய விதிகளை ஏற்படுத்தியவர். நாவலர் அவர்கள் கூறும் புராணபடன விதிகளில் ஒன்று பின்வருமாறு: "புராணம் வாசிப்பவர் சபையார் யாவருங்கேட்கும் பொருட்டுத் தெளிவு பெற வாசித்தல் வேண்டும். வாசிக்கும் காலத்திற்கும், எடுத்தவிஷயத்தினது குணத்திற்கும்

(பக்கம் 11-ல்)

அன்னபிதாகுரு கிருண்டுகொண்டெய்யார்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

முது ஒரு மகனுக்கு (வயது 19) முதுகெலும்பில் வலி கண்டது. இங்கே பார்த்து வைத்தியர் கொழும்புக்குச் செல்லும்படி சொல்லித் தகப்பனுக்கும் கடிதமெழுதி விட்டார். சில நாட்களால் அங்கிருந்து எனக்குக்கடிதம் வந்தது. நோய் பலமானது. வைத்தியத்துக்கு இங்கிலாந்துக்கும் செல்லவேண்டியிருக்குமென்று பெரியவைத்தியர்களெண்ணுகிறார்கள். எனக்கொன்றுஞ் செய்யத் தெரியவில்லை. சுவாமியாரிடம் போ என்று. கடிதங் கிடைத்தவுடன் ஒரு துணையோடு கிளம்பிவிட்டேன். தேடிக்கண்டேன் "எங்கள் தெய்வத்தை. ஓர் அடியார் இல்லத்து விருந்தையில் நாற்காலியில் வீற்றிருந்தார். அழுத வண்ணம் ஓடித்திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்தேன். "என்ன? என்ன?" என்று ஆதரவோடு வினவியதோற்றத்தை அடியேன் எப்படி வர்ணிப்பேன்! விம்மல் விக்கல்களுக்கிடையில் நடந்ததைக்கூறினேன். சிலநிமிஷங்கள் கண்களைமூடி மௌனமாயிருந்த பின்- பின் வருமாறு ஆக்ஞை பிறந்தது. "அது ஒன்றுமில்லை. இல்லாததொன்றை உண்டென்று நினைத்ததை மாற்றுகிறதற்கு பிறந்த நட்சத்திரத்தில் வீரமாகாளி அம்மனுக்கு அர்ச்சனை செய்வீ. அவருக்கு அறிவித்துவிடு இன்னும் ஆறுதல் மொழிகள் கூறியனுப்பி விட்டார். கட்டளையின்படி நடந்தோம். அங்கே நடந்த வைத்தியத்துடன் நோயுங்குணமாயிற்று.

எல்லோருங் கொழும்பிலிருக்கும்பொழுது ஏதுஞ் சிறு காரணத்தோடு தன்னும் யாழ்ப்பாணம் வந்துபோகிற எண்ணமாகவேயிருப்போம். எப்போ எங்கள் தெய்வத்தைக் காண்கிறதென்ற ஆவல். இங்கே வந்து திரும்பும் வரை எத்தனைமுறை தரிசிக்க முடியுமோ அத்தனை முறை செல்வோம். சில சமயங்களில் அடி (விரட்டியடிப்பார்) வேண்டித்திரும்புகிறதும் உண்டு. காலஞ் செல்லச்செல்ல ரயில்நிலையத்திலிருந்து நேரே ஆச்சிரமத்துக்குச் செல்லும் வழக்கம் ஏற்பட்டது. அந்நாட்களில் என் மனம் திருவாத ஊரடிகள் புராணத்தில் வரும்

"மிடைகெடவைத்தபாத
வித்தகரூரை நோக்கி
நடையிடு மெல்லை
தன்னினன் மன
விரைவுங் காற்றுந்
தடைபடு கன்றை
நாடுங் கபிலையுந்
ததும்பி நின்று
மடையினை யுடைக்கு
நீரு மாயினர் வாதவூரர்"

என்ற செய்யுள் மனத்தில் தோன்றிக் கொண்டேயிருக்கும். எப்போ! எப்போ! எங்கள் தெய்வத்தின் தரிசனங்கிட்டும் என்ற பேராவல். தரிசித்துச் சந்நிதானத்தில் எவ்வளவு நேரம் இருக்கிறபாக்கியங்கிட்டுதோ அவ்வளவுக்கு ஆனந்தப்பெருக்கு. செல்லவிடைகிடைத்தால் செல்லமனமில்லாத தயக்கம். எங்கே சென்றாலும் யாரைக்கண்டாலும் சம்பாஷணையில் தெய்வத்தினுடைய மணம் கமழாமல் இராது. இப்படி ரயில் நிலையத்திலிருந்தே ஆச்சிரமத்துக்குச் செல்கிற வழக்கம் ஏற்பட்டபின் சில சமயங்களில் புங்கங்குளம் நிலையத்திலிருந்து கால் நடையாகவும் ஆச்சிரமம் செல்வதுண்டு. (இரவு ரயிலில் தான் வருவது) ஒருநாள் அப்படிச் செல்லுகையில் விடிகிற நேரமாக எனக்கு மிகவும்பசியெடுத்து விட்டது. ஆச்சிரமத்துக்குச் சென்று அன்புச் சொரூபமாயிருக்கும் தெய்வத்தின் திருவடிகளில் வணங்கி யெழுந்தவுடன் அங்கிருந்த அனைவருக்கும் விசுக்கோத்துப் பரிமாறும்படி அங்கிருக்கும் அன்பருக்குக் கட்டளை பிறந்தது. அதோடு தேநீரும் கிடைத்தது.

"உன்னை முழுவதும்
ஒப்புக் கொடுத்தால்
அன்னையப் போலே
யாதரிப்பாரே"
(நற்சிந்தனை)

"தாயிற் சிறந்த
தயவான தத்துவனே"
(சிவபுராணம்)

பெற்றதாயினுஞ் சிறந்த பரிந்த உள்ளமும் அருள் நோக்கும் எந்நாளும் எம் மனத்தைவிட்டு அகலா. எங்கள் தெய்வம் மறையவேயில்லை. "சிந்திக்குந் தோறுஞ் சிற்சுகமாய் ஊற்றூறி"க் கொண்டேயிருக்கிறது.

"இருவினையின் கட்ட
ழித்து எல்லாஞ்
சிவன் செயலாய்
கருதும்படி வைத்த
கருணை நிறை ஆசான்றன்
திருவடியைப் பாடி
நாம் சிந்தித்துச்
சிந்தித்து
உருகி உருகி உணருவோ
மம்மானுய்
"ஈர்த்தென்னை ஆட்
கொண்ட எந்தை
குருநாதன்
கூர்த்த திருநயனக்
கொள்கையிற் பாவ
மெல்லாம்
தீர்த்தானவன்றன் திரு
வடியை நாம்பாடித்
தோத்திரித் தென்றும்
புகழ் பெறுவோ
மம்மானுய்
"சிந்தித்துச் சிந்தித்துச்
சிவமே நாமென்
றெண்ணத்
தந்திடுவாய் நல்லவரம்
தற்பரனே பராபரமே"

இவ்வாறு (அடியேமை) அன்னபிதாகுருவாகி ஆண்டருளிய தெய்வத் திருவடிகளை இடையருது சிந்தித்துப் பேரின்பமடைவோமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞாயிறு கதை மலர்

மாரியும் கோடையும் உலகில் மாறி மாறி வந்தன. மலர்கள் பூத்து உதிர்ந்தன. அவனும் வாடிய பூவாய் பொலிவிழந்து கொண்டே வந்தான்.

எவர்களுக்காக வாழ்ந்தானே அவர்களில் ஒருத்தி—அவன் மூத்த சகோதரி ஒருநாள் அவனுக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தாள்.

கடிதத்தை அவன் படித்து முடித்தபோது இரண்டு சொட்டுக் கண்ணீர் அதன்மேல் வீழ்ந்தது. சலனம் எதுவும் இல்லாமல் அமைதியாய் என்றும் போல் பழைய அவனுகவே இருந்தான்.

"அவளுக்கு என்ன பதில் எழுதப்போகிறாய்?' என்று கேட்டேன்.

"என்ன எழுத . . . என் வாழ்வில் வசந்தம் வந்துபோயிற்று. இது பட்டமரம். அது இனி துளிர்க்குமோ?" என்றான்.

"என்னடா இப்படிச் சொல்கிறாய் உன்னை வாழவைத்துப் பார்க்க ஆசைப்படும் தாயும் சகோதரிகளும்—"

"நான்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறேனே . . . உலகத்தில் கற்பனைக் காவியங்கள் கண்ட அழகெல்லாம் ஒன்று சேர்ந்த ஓர் அழகியுடன் நெஞ்சத்தால் அணைத்து நிஜமாவாழ்ந்து கொண்டிருக்கிறேன்."

அவன் கதை அதுவே ஆயிற்று. ஓர் அதிசயப் பிறவி சுவர்க்—மலர்களிலே ஒரு சம்பங்கி.

மலர்களிலே ஒரு சம்பங்கி

— ப. ஸ். ராஜு B.A.

வாழ்வின் வேகத்தில் நான் என்னையே மறந்து ஆசைதியை நாடும் வேளைகளில் எல்லாம் எதை மறந்தாலும் என்னை மறக்கமுடியாது என்பதுபோல் அவனின் நினைவு வந்து நெஞ்சை நிறைக்கும் அந்த அவனின் நினைவு வந்தவுடன் நான் எல்லாவற்றையும் மறந்து போவேன். உலகம் என் கண்களில், உள்ளத்தில் இருந்து மறைந்துபோகும். உலகத்தின் இன்பத்துக்கும் துன்பத்துக்கும் ஒரு சாட்சி என்பதுபோல் அவன் என் உள்ளமெல்லாம் நிறைந்து நிற்பான்.

ஒல்லியான ஆனால் உறுதியான அவனுடலும், நீண்ட முகத்தில் சுறுசுறுவெனத் துடிக்கும் சிவந்த விழிகளும், சிவந்த உதடுகள் நிறைந்து சிரிக்கும்போது முத்து முத்தாய் மினுமினுக்கும் பற்களுமாய் அவன் என் முன்னால் வந்து நிற்கும் போது, என் நெஞ்சில் நிறைந்த உலகத்துன்பமும், வேதனையும் மறைந்து அந்த இடத்தில் இனம் தெரியாத ஒரு பாசத்தின் உருவில் அவன் உள்ளத்தில் நிறைவான்.

வாழ்வு எத்தனை விசித்திரமானது, அதற்காகத் துடிக்கும் மனித மனங்கள் எத்தனை எண்ணங்களை, கனவுகளைக்கண்டுகண்டுகாலத்தைக் கடத்துகின்றன. அவன் வாழத்துடித்தான். நெஞ்சம் நிறைந்த வாழ்வாய் உலகத்தில் எல்லோரும் வாழ்வது போலல்லாமல், தனித்த ஒரு கனவுலகில், பொய்யும் பொறுமையும் குரோதமும் அற்ற உலகில், உலகத்தின் கற்பனைக்காவியங்கள் கண்ட அழகெல்லாம்ஒன்றுதிரண்ட அழகெல்லாம்ஒன்றுதிரண்ட ஓர் அழகியுடன் நெஞ்சத்தால் அணைத்து நினைவால் வாழத் துடித்தான்.

அவன் ஓர் அதிசயப்பிறவி. அவன் என் நண்பனாவன். எல்லோரையும் கவரும் ஏதோஒருசக்தி அவனிடமிருந்து, அதில் நான் என்னையே இழந்து, இதயத்தின் பரிசுத்தமான அன்பால், பாசத்தால் அவனை நண்பனாக்கிக் கொண்டபோது அவன் தனது இதயத்தின் பைத்திய காரத்தனமான எண்ணங்களையும், நினைவுகளையும் கூடை நிறைந்த மலராய்க் கொட்டித் தீர்ப்பதற்கு என்னைத்தான் தேடி வருவான்.

யாழ்ப்பாணத்தின் வரண்ட பிரதேசத்தில் ஏதோ ஓர் ஊரில் அவன் பிறந்தான். தாய்க்குத்தலை மகனுய் இளந் தம்பதிகளின் முழுஉணர்ச்சியின் வடிவாய் தோன்றினான். அவனை யடுத்து ஐந்துசகோதரிகள்.

தந்தை அந்தக் காலத்துச் சட்டம்பி. ஒட்டிய வயிறும் உலர்ந்த நெஞ்சுமாய் அவர் வாழ்வில் செக்கு மாடாய் ஓரே சுருதியில் சுற்றிச்சுற்றி வந்தார். அவர் தமது அந்திம காலத்தில் கண்ணீர்க் குளமாய் வாழ்வைக் கழித்தார். ஐந்து பெண்களைப் பெற்றுவிட்டால் அரசனும் ஆண்டியாகிவிடுவான். ஆண்டியான அவர் என்ன ஆனார் தெரியுமா? தமது செல்வங்களை நினைத்து நினைத்து, அவர்களின் எதிர்கால வாழ்விற்காக, உதவாத ஆண்—வனை வேண்டிக் கொண்டு தாம் அடைய முடியாத சுகத்தை தனது செல்வங்களாவது அடையவேண்டுமென்று கனவு கண்டு நெஞ்சம் மறுகிச் செத்தார்.

அவர் செத்ததால் உலகத்திற்கு ஒரு நட்டமும் இல்லை, குடும்பத்திற்குத்தான் நட்டம்.

தந்தை இறந்த போது அவன்தான் உலகத்தையும், உள்ளத்தையும், குடும்பத்தையும் புரிந்துகொள்ளும் சக்திபடைத்திருந்தவன். எப்படியோ தந்தை இருந்த காலத்தில் ஒன்பதாவது வரை படிப்பித்திருந்தார். அந்தத் தகுதியையும் அதற்கும் மேலான உள்ளத்து உறுதியையும் வைத்துக் கொண்டு கரைகாணுத் துன்பக் கடலில் மிதந்த குடும்பத்தைக் கரைசேர்க்கும் முயற்சியில் இறங்கினான்.

முகமவிழா மொட்டாக வாழ்வை எதிர்நோக்கிக் காத்து நிற்கும் அவர்களைப் பார்க்கும் போதெல்லாம் தனக்கு உலகமே வெறுத்து, வாழ்வு கசந்து, நெஞ்சு உலர்ந்து விடுவதாய் அவன் கூறும் போது, உண்மையிலேயே அவனின் அந்தநிலைக்காக இரங்கி நான் வேதனைப் பட்ட நாட்கள் பல.

தந்தை இறந்தபின் அவன் அவரின் கடைசிக்கனவை நனவாக்கத் துடித்தான். தான் எங்கே சென்றாலும், எது செய்தாலும் தன் பின்னால் நிழல் தொடர்வது போல் ஏதோ ஒரு சக்தி—உள்ளுணர்வு மட்டுமே உணர்ந்து கொள்ளக்கூடிய சக்தி-தொடர்ந்து வருவதாய் ஓர் உணர்வேற்பட்டு அதற்குத்தான் தலைவணங்குவதாய் அவன் கூறும்போது, நான் கலங்கிய கண்களைக் காட்டிக் கொள்ளாமல் அதற்கு ஏதோ சொல்லிச் சமாளித்திருக்கிறேன்.

கண்ட கனவுகள் நிறைவேறுமல் இதயம் வெடித்துச் செத்த அவன் தந்தை, தன் பிள்ளையால் கலைந்த கனவு நிறைவேறப் போவதைப் பார்ப்பதற்காக அலைவதாக உணர்வேன்.

அடுத்து வேலைதேடும் படலத்தில் இறங்கி ஆசைகள் யாவும் நிராசையாகி, வாழ்வே வெறுத்து அலையெறியும் கடலில் அமைதி காண விழைந்தபோதுதான், நான் அவனைக் கண்டேன். அவன் கண்ணீர் சொன்ன கதைகளைக் கேட்டேன். வேதனையில் சாம்பும் துன்பத்தின் கோடியில் நிற்கும் ஒரு மனித இதயத்தின் துடிப்பை அறிந்து, அவனைப் போலுள்ளவர்களின் அந்த நிலைக்காக இரங்கி என்னுள் இரத்தக் கண்ணீர் வடித்தேன்.

எனக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. அவன் அடிக்கடி சொல்லி இருக்கிறான். தகப்பன் சாகும்போது அவன், அவர் அருகே இருந்தானும். மகனின்முகத்தைப் பார்த்து கண்ணீர் வழியும் கண்களால் கூறி "உன்மீது இவ்வளவு சுமையை ஏற்றிவிட்டுப் போவதற்காக என்னை மன்னியடா மகனே" என்பதுபோல் கையெடுத்துக் கும்பிட்டாராம். நினைக்கவே நெஞ்சம் உருகும் காட்சி. அவனுக்கு எப்படி இருந்திருக்கும் . . .?

அவர் கடைசியாகக் கூறினார்:

"நான் கடைசிவரை ஏழையாய் இருந்து ஏழையாகவே சாகிறேன் . . . வறுமை மிகுந்த இந்த உலகவாழ்வில் நான் போரிட்டு வெற்றி பெறுமல்தலைகுப்புறவிழுந்து விட்டேன் . . . சாகும்போது கூட நான் ஏமாற்றத்துடன் தான் போகிறேன் . . . முழுமை பெறுத வாழ்வில் நான் ஏங்கி ஏங்கிச் சாகிறேன். நீ என் நிலையிலிருந்து மாறவேண்டும் . . . நான் கண்ட கனவுகளை நீ நனவாக்க வேண்டும் . . . அப்போதுதான் என் ஆத்மா சாந்தியடையும். ஒன்று . . . நான் எதிர்த்த உலகத்துடன் நீ ஒத்துப்போ . . . அப்போதுதான் வெற்றி பெறுவாய் மகனே . . .

வாழ்வில் அடிபட்டுக் களைத்த உள்ளத்தின் ஏக்கம் மிகுந்த வார்த்தைகள் இவை.

நா. யோகேந்திரநாதன்
எழுதிய
வாளந்தாமரை
(நெடுகதை)
18-4-65 ஞாயிறு
முதல் வெளியாகிறது.

அவனுக்கு என் கம்பெனியில் ஒரு வேலை தேடிக் கொடுத்தேன்.

அவன் தனது தந்தையின் கனவை நிறைவேற்ற இரவு பகல் பாராது உழைத்தான். இடையில் அவனுக்கு உலகத்தின் நினைவே ஏற்படவில்லை. சாதாரண மனிதமனங்கள் போன்று அவன் உலக வாழ்விற்காக ஆசைப்படவில்லை. தங்கைகளின் மலர்ச்சிக்காக அவன் வாடிய சருகானான். எல்லோருக்கும் ஏற்படுவது போன்ற வாலிபத்தின் குறும்புகள், உளறுகிழுவுகள் அவனிடம் காணப்படவில்லை.

யார் கண்டார்கள்-?

உள்ளத்தில் எத்தனையோ எண்ணங்களையும் நினைவுகளையும் வைத்துக் கொண்டு சதா இளமைக் கனவுகண்டு அதனை அடைய முடியாது, அனுபவிக்க இயலாது என்ன மன அவதியில் வெளியிற் காட்டிக்கொள்ளாமல் இருக்கலாம். அலுவலகத்தில் வேலை செய்யும் சக நண்பர்கள் அவனை அவனின் போக்கிற்காக, துறவி மனப்பான்மைக்காகக் கேலி செய்யும் போது இப்படித்தான் சொல்வார்கள். அவன் ஒரு பைத்தியகாரனும் . . . இந்த உலகத்தில் வாழவே தகுதி இல்லாதவனும்

நான் சிரிப்பேன். அவனைப் போன்றவர்களால் தான் உலகம் வாழ்ந்து கொண்டிருப்பதாக உணர்ந்து அவனைக் கேலி செய்யும் அவர்களின் அறியாமைக்காகச் சிரிப்பேன்.

காலம் தன் பாட்டில் சென்று கொண்டிருந்தது. அதற்கு இன்பத்திலும் துன்பத்திலும் உழலும் மனிதர்களைப் பற்றிக் கவலை இல்லை. அதன் போக்கில் சிலர் மாறுகிறார்கள். பலர் ஒரே கதியில் சென்று கொண்டிருக்கிறார்கள். அந்த வகையில் அவனும் ஒருவன். அவன் சுருதி மாறுமல், அடிபிசகாமல், ஒரே கதியில் பழைய வாழ்க்கையிலேயே நடந்து கொண்டிருந்தான்.

பாவம், நான் அவனுக்காக வேதனைப்பட்டேன்.

எப்போதோ ஒருநாள் அவன் தன் உள்ளத்து ஆசைகளையும் இளமைக்கனவுகளையும் எல்லாம் இதயம் உணரும்படியாக வெளியிட்டான். எழும்புக்கும் தசைக்கும் இடையே துடிக்கும் மனிதஇதயத்தின் அலை இரைச்சலை அன்றுதான் கேட்டேன்.

அந்த நாள் . . .

அன்று இரவு நான் அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்துவிட்டு ஏதோ ஓர் உள்ளுணர்வின் துடிப்பில் விழித்துக்கொண்டபோது, அடுத்த கட்டிலில் படுத்திருந்த அவன் எழுந்து அமர்ந்து சிரித்துக் கொண்டிருப்பதை விடிவிளக்கின் மங்கல் ஒளியில் கண்டேன். நான்எழுந்து

(3 ஆம் பக்கம் பார்க்க)

"லேடன்" தயாரிப்புகள்:- LEYDEN

- பெனியன்கள்
- ஸ்போர்ட் சேட்டுகள்
- ரி சேட்டுகள்
- கால் மேசுகள்

(Nylon & Woolen)

லேடன் இன்டஸ்ரீஸ் லிமிடெட்

7, கஸ்தூரியார் வீதி :: :: யாழ்ப்பாணம்

அழுக்கணவனையும்—புழுக்கனையும் அழியாத்து

மெற்றசிஸ்ரோக்ஸ் உடன் - டிப்ரெரெக்ஸ்

METASYSTOX DIPTEREX

மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய

விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

விளக்கைத் தூண்டிய போதும் அவன் அப்படியே தான் இருந்தான், என் நெஞ்சம் துணுக்குற்றது.

"டேய் . . . என்னடா இது . . . நடிச் சாமத்தில் பேய் மாதிரி . . . என்று நட்பின் உரிமை பாராட்டி இப்படிக் கேட்ட போதும் அவன் சிரித்துக் கொண்டுதான் இருந்தான். நான் அவனைத் தொட்டு அசைத்தபோதுதான் உணர் வடைந்து வெட்கத்துடன் "ஒன்றுமில்லே" என்றான்.

"என்னடா . . . ஏதாவது காதற்கனவு கண்டாயா . . .?"

"கனவுதான் கண்டேன்... காதலில்லே . . . கண்ணீர்க் கனவு . . ."

எனக்கு ஒன்றும் விளங்க வில்லை.

"நான் எனது ஆட்டோவைப் பார்த்தேன்... கனவில் தான் . . . அவர் வந்து என் தலைமாட்டில் அமர்ந்து கனிந்த கண்களால் என்னைப் பார்த்துச் சிரித்தார் . . . பிறகு குனிந்து நெற்றியில் முத்தமிட்டார். அப்ப . . . இரண்டு சொட்டுக் கண்ணீர் என் நெஞ்சில் விழுந்து குளிர்ந்தது மாதிரி இருந்தேன். உடனே விழித்துவிட்டேன்..."

எனக்கு அவனின்கனவைக் கேட்க வியப்பாகவும் வேதனையாகவும் இருந்தது. மறைந்து போன அவன் தந்தை வந்து அவனின் தன்னலமில்லாத தியாகத்தைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் சொரிந்து, அந்தக்கண்ணீரால் அவனைக் குளிர வைத்து, வாழ்த்திப்போயிருக்கிறார் என்பதைநினைத்த போது என் உடலும் உள்ளமும் சிலிர்த்தன.

அவன் ஒரு திருமண வாழ்த்தை எடுத்துப் படித்தான். கண்ணீர்த் துளிகள் அதில் விழுந்து கோலப்படுத்தின. அப்போதுதான்அன்று அவனின் மூன்றாவது தங்கையின் திருமணநாள் என்பது ஞாபகம்வந்தது. அவன் போகவில்லை. அங்கிருந்தபடியே ஆனந்தக் கண்ணீர் சொரிந்து அவளின் மங்கல நாண் சூழ மனைவியாகும் கோலத்தைக்கண்டு மகிழ்கிறான் என்பதை உணர்ந்து அமைதியாய் இருந்தேன்.

அவன் உணர்ச்சிச் சுழலில் இருந்து விடுபட்டு மீண்டும் சிரித்தான்.

"என்னடா . . . பைத்தியக்காரன் மாதிரி . . . ஒருக்கால் அழுகிறாய், பிறகு சிரிக்கிறாய் . . . உனக்குப் பைத்தியம் தான் . . . அதுவும் இலேசானதல்ல . . . காதல் பைத்தியம் . . ."

நான் வேடிக்கையாகக் கூறினேன்.

"காதலா... அது வாழ்க்கைக்கு உதவாத ஒன்று... கனவு காணவேண்டுமானால் காதலி... என்று எங்கேயோ படித்த ஞாபகம். மெய்தான்அது... காதல் ஒரு கனவு... எனக்கு இப்போது அதற்கு நேரமில்லே. இன்னும் இரண்டு தங்கைகள்... அவர்களின் வாழ்வு... இதுதான் நான் காணும் கனவு..."

சந்தோஷமாகத்தான்கூறினான்.

என்னுள் ஏதோ ஒன்று நெகிழ்ந்தது.

"ஏன், உன்னிடம் கூறினால் என்ன...? எனக்கு காதலிக்கவேண்டும்; கல்யாணம் செய்ய வேண்டும்; ஒருத்தியுடன் வாழவேண்டுமென்ற நினைவே இல்லே... அதிசயமாயிருக்கும் உனக்கு... என் நிலையில் இருந்து வேதனைப்பட்டு வெம்பிக் கண்ணீர் வடித்து சுமக்க முடியாத சுமையைச் சுமந்து... உள்ளம் மரத்துப்போயிருந்தால் உனக்குத் தெரியும்..."

சிறிதுநேரம் அமைதியாய் இருந்தான்.

எனக்கு அவனைப்பற்றிய பரிசுத்தமான தெய்வத்தை வணங்குவதுபோன்ற ஒரு புனிதமான நினைவு நெஞ்சில் எழுந்தது. அதற்கு,

சிறுகதை (7ம் பக்கத் தொடர்ச்சி)

அவனின் நினைவிற்கு, மனித வடிவில் தெய்வமாய் இருக்கும் அவனுக்கு நான் மானசீகமாய்த் தலைவணங்கினேன்.

"நான் அந்தச் சுமைகளை இறக்கி வைக்கவே ஆயுள் சரியாய் இருக்கும்... எல்லாக் கனவுகளையும் நிறைவேற்றி வெறும் மனிதனாகும்போது உலகம் வாழ இடம்கொடுக்காது... இந்த மண்ணில் என் வாழ்வு பழுத்துக் காய்ந்து... சருகாக உதிர்ந்துவிடும்..."

நான் அவன் இதழ்களை மூடினேன்.

"ஒருகாலத்தில் நானும் உலகத்தில் மற்றவர்களைப் போல வாழ ஆசைப்பட்ட துண்டு... அவை இளமைத் துடிப்பின் கனவு... நான் ஒருத்தியைக் காதலித்தேன். அது அப்பா இருக்கும் போது... அவரும் இருந்து, குடும்ப பாரமும் என்னை நசுக்காவிட்டால் நீ நினைக்கிறமாதிரி நானும் அவளுடன் வாழ்ந்திருப்பேன்..."

அவன் உள்ளத்தில் கனன்று கொண்டிருந்த உணர்வுகள் என்முன் தீப் பொறிகளாய்ச் சிதறின.

"அது ஒரு காலம்... உலகம் அறியாத பருவத்தின் அழகில், மயங்கும் இளமைத் துடிப்பில், உணர்ச்சிகளின் வேகத்தில் கண்ட ஓர் கனவு... அந்தக்கனவுகளை யெல்லாம் இந்த உலகம் உள்ளத்திலிருந்து கலைத்து விட்டது..."

எனக்கு இதயத்தை என்னவோ செய்தது. கண்கள் என் கட்டையும் மீறி நீரைப் பொழிந்தன. மனித உள்ளங்கள் அவன் கலைந்த கனவைக் கேட்கும்போது என்ன பாடுபடும் என்பதை இதயபூர்வமாக நான் அப்போது உணர்ந்தேன்.

அவன் கூறினான்:

"உலகத்தின் கற்பனைக் காவியங்கள் கண்ட அழகெல்லாம் ஒன்று திரண்ட ஓர் அழகியுடன் நெஞ்சத்தால் அணைத்து நினைவால் வாழ்ந்து கொண்டிருக்கிறேன்..."

அவன் சிரித்தான்.

நானும் சிரித்தேன். விளக்கை அணைத்துப் போர்த்துக்கொண்டு படுத்துவிட்டான்... எனக்குத் தூக்கம் வரவில்லை. மனம் ஓயாது அவனைச் சுற்றியே வட்டமிட்டது. சூழ்ந்த இருளிலும் அவனுடைய கண்ணீரில் கலைந்து, கற்பனையில் மலராத இதயம் என் கண்களுக்குத் தெரிந்தது.

மாரியும் கோடையும் உலகில் மாறி மாறி வந்தன. மலர்கள் பூத்து உதிர்ந்தன. அவனும் வாடிய பூவாய்ப் பொலிவிழந்து கொண்டே வந்தான். உறுதியான தேகம். தளர்ந்து ஒல்லியாகி, அடர்ந்த தலைமயிர் கொட்டுண்டு வழுக்கையாகி, பளபளத்துச் சிவந்த விழிகள் ஒளியிழந்து உலவாகி, அவன் ஆளே மாறிப் போனான்.

(9ம் பக்கம் பார்க்க)

அழகினுக்கு

மெருகூட்டுங்கள்!

வழவழவென முகத்தில் படிந்திருக்கும்
எண்ணெயை அகற்றி,
சருமத்திற்கு பட்டுபோன்ற மிருதுவான
யௌவன வனப்பை அளிப்பது
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

உங்கள் சருமத்திற்கு புதியதோர் பொலிவு கொடுங்கள். கச்சிதமான தோற்றமளிக்க விரும்பும் யுவதிகள் யாவருக்கும் கிட்டும் இப்பொலிவு எண்ணெய் பசையற்ற மென்மையான பொன்ட்ஸ வெனிஷிங் க்ரீம் சருமத்தை மிருதுவாக்கி, பாதுகாக்கிறது. சருமத்தில் காணப்படும் மாசுமருக்களையும், அகன்ற மயிர்க்கன்களையும் மறைத்து சுகப்படுத்துகிறது. கறும்பருக்கள் தோன்றுதபடி பாதுகாக்கிறது. மிருதுவான பட்டுச் சருமத்தை பெற பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீமை தனியாக பாவியுங்கள். களங்க மற்ற தோற்றத்துடன் மணிக்கணக்காக பௌடரை சமமாக நீடித்து நிலைத்திருக்கச்செய்ய, பௌடர் பூசுவதற்கு முன் இக்கிரீமை அடித்தளமாக பாவியுங்கள்.

சருமத்திற்கு புதியதோர்
மெருகூட்ட
பொன்ட்ஸ் வெனிஷிங் க்ரீம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலர்களிலே ஒரு சம்பங்கி

சிறுகதை

(தொடர்ச்சி)

எனக்கு அவனைப்பார்க்கும் போதெல்லாம் உலகில் வாழ்வின் நிலையாமை தான் ஞாபகத்துக்கு வரும். மனித வாழ்வு எவ்வளவு அற்புதம்; அத்தனை விசித்திரம்; அத்தனை குறுகியது. அவன் கட்டைப் பிரமச்சாரியாய் என்முன் உலவும்போது, நான் அவனையும் கடந்த உள் மனதைத்தான் உணர்ந்து வேன். அவன் சுமக்க முடியாத சுமையைச் சுமந்து வலைந்துபோனான். வேதனைப்பட்டுப்பட்டு உள்ளம் மரத்துவிட்டது.

அவன் தன்னுடைய வாழ்வைப் பற்றிய நினைவே இல்லாமல் மற்றவர்களுக்காக வாழ்ந்து கொண்டிருந்தான்.

ஒருநாள் பகல் சாப்பாட்டு வேளையில் அவன் என்னைத் தேடிக்கொண்டு வந்தான். கையில் ஒரு கடிதம் இருந்தது. அதை என்னிடம் தந்து படித்துப்பார்க்கும்படி கூறினான்.

அவன் மூத்தசகோதரி எழுதியிருந்தாள், எனக்குப் படிக்கப்படிக்கக் கண்கள் கலங்கிக் கொண்டு வந்தது. இதயத்தின் மென்மையான உணர்வுகளைத் தட்டி, துயின்று கொண்டிருக்கும் உணர்வுகளை எழுப்பி ஏதோ ஒரு வகையில்வேதனைப்படுத்திக்கண்ணீர் விடும்படி இருந்தது அந்தக்கடிதம்.

அவள் எழுதியிருந்தாள்;

"நீ எங்களுக்காகவே வாழ்ந்து உன்னையே மறந்து விட்டாய். உலகத்தில் எங்களை வாழவைக்க எவ்வளவு பாடுபட்டாய். அதற்குக் கைமாறுக நாங்கள் உங்களை வாழவைத்துப் பார்க்க ஆசைப்படுகிறோம். வயது போன காலத்தில் உன்னை நினைத்துப் பெருமைப்படும் அம்மா அதேவேளை வேதனைப்பட்டுக் கண்ணீர் வடிக்கிறார்கள். நாங்கள் பச்சை மரமாய் பூவும்காயுமாய்ச் செழித்திருக்க நீ மட்டும் மொட்டைமரமாய் உலகத்தில் தனித்து நிற்கிறாய்... அதை நினைத்து நாங்கள் வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறோம். உன் எண்ணத்தை எழுதவும்."

கடிதத்தைப் படித்து முடித்தபோது இரண்டு சொட்டுக்கண்ணீர் அதன் மேல் விழுந்தது. நிமிர்ந்து அவனைப்பார்த்தபோது, அவன் சலனம் எதுவும் இல்லாமல் அமைதியாய் என்றும் போல், பழைய அவனாகவே இருந்தான்.

"என்ன எழுதப்போகிறாய்...?"

"என்ன எழுத... எனவாழ்வில் வசந்தம் வந்து போயிற்று. இது பட்ட மரம்.. அது துளிர்க்குமா?"

"என்னடா இப்படிச் சொல்கிறாய்... உன்னை வாழவைத்துப்பார்க்க ஆசைப் படும் தாயும் சகோதரிகளும்..."

நான் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேனே... உலகத்தின் கற்பனைக் காவியங்களைக்கண்ட..."

நான் இடைமறித்தேன்.

"கற்பனையை விட்டு... இந்த மண்ணுக்கு வா..."

அவன்பேசாமல் சிரித்துக் கொண்டே எழுந்துபோய் விட்டான். நான் அவன் போகும் திசையைப்பார்த்துக்கொண்டே இருந்தேன். இந்த உலகத்தில் வாழத் தகுதி இல்லாதவன்... மனம் அலைகடலாய்க் குமுறியது...

இடையே இரண்டு வருடங்கள்

அவன் தனது கடைசித் சகோதரியின் திருமணத்திற்காகப் போயிருந்தான். கடைசித் தங்கையல்லவா-? அந்த அன்புத் தங்கையின் அருகில் இருந்து ஆசீர்வதிக்க வேண்டுமென்னும் ஆசையால் உந்தப்பட்டு அத்துடன் வாழ்வில் சுமந்த சுமைகளையெல்லாம் இறக்கி வைத்து, வரண்டுவிட்ட இதயம் சந்தோஷப்படும் நாள். அவன் போவதில் இன்னொரு மகிழ்ச்சி எனக்கு. சுமைகளை இறக்கிவைத்த களையுடன் காலமெல்லாம் தொடரும் வாழ்வுச் சுமையை ஏற்றி வைப்பார்கள் என எண்ணி இருந்தேன்.

அவன்போன அடுத்த வாரம் எனக்கொரு தந்தி வந்தது. அவன் படுத்த படுக்கையாகிவிட்டானும். அலறும் இதயத்தைப் பிடித்துக்கொண்டு ஓடினேன்.

அங்கே தாங்க முடியாத பாரத்தைச் சுமந்த அவனுடல் அதனை இறக்கி வைத்த களையோடு படுத்துக்கிடந்து. உள்ளம் மட்டும் பழைய கற்பனையிலேயே மலர்ந்து கொண்டிருந்தது.

என்னைக் கண்டதும் கண்கள் மலரச் சிரித்து வரவேற்றான். புகைபடிந்த ஓவியமாய் ஒளியிழந்த அவன் முகத்தைக் கண்டதும் எனக்கு அழுகை பொங்கிக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டு அமைதியாய் இருக்க முயன்றேன்.

அவனைச் சுற்றி ஆலமரத்து விழுதுகளாக, தங்கைகளும், அவர்கள் குழந்தைகளுமாகச் சூழ்ந்து நின்றார்கள். பட்டமரம் என்றுகூறிய அவனைச்சுற்றிஎவ்வளவுவேர்களும் விழுதுகளும்! எனக்கு வேதனையிடையேயும் சிறிது மகிழ்ச்சியாய் இருந்தது, அவனது தியாகத்தால் செழித்த குடும்பத்தைக் கண்டபோது.

நான் அருகே அமர்ந்த போது அவன் என் கைகளைப்பற்றிக் கொண்டான். அவைகள் தளிர்ப்பூங்கொடியாய் நடுங்கின. தேய்ந்த சந்தனக் கட்டையாய், ஒளி கொடுத்து உருவழிந்த மெழுகுதிரியாய் என்கண்களுக்குக்காட்சி தந்தான்.

"உனக்குத்தான் தெரியும் என் நிலைமை... அழுது கொண்டேஇருக்கும் அம்மா மாவைப்பார்த்தாயா..? அவருக்கு நான் உயிரும் உடலும் உள்ள ஒருத்தியுடன் வாழவில்லையே என்ற கவலை... நான் தான்... உலகத்தின் கற்பனைக் காலியங்கள் கண்ட அழகெல்லாம் ஒன்றுதிரண்ட ஒருத்தியுடன் நெஞ்சத்தால் அணைத்து நினைவால் வாழ்ந்துகொண்டிருக்கிறேன்..."

நான் பொங்கும் கண்ணீரை அடக்கமுடியாமல் அழுதபோது அவன் "நீயும் என்னைப் புரிந்து கொள்ளாமல் அழுகிறாயே..." என்றான்.

நான் அவர்களிடம் ஆறுதல் கூறி விடைபெற்று சிறிது தூரம் வந்தபோது அவன் வீட்டில் இருந்து பேரலறல் என் செவிகளில் மோதியது. குடும்பத்திற் காகவே வாழ்ந்த அவனின் கடைசிஅத்தியாயம் முடிந்து விட்டது. அவன் ஓர் அதிசயப் பிறவி-மலர்களிலே ஒரு சம்பங்கி.

தூரத்தில் கேட்கும் ஓப்பாரிக்குரல்கள் எனக்கு, அவனின் கலைந்த கனவுக்கு வாழ்த்துப்பாடுவதாக ஓர் உணர்வு நெஞ்சில் எழுந்து அலைந்தது.

(யாவும் கற்பனை)

கொஞ்சம் சிரியுங்களேன்

"என்னங்க கவலையாக இருக்கீங்க? உங்க பேரு என்னு?"

"என்பேரு சந்தோஷ முங்க!"

அனுப்பியவர்:
பி. கே. ஈஸ்வரன்
(இணையன்)
2, அப்பாசாமி பிள்ளை சந்து,
தொண்டை[illegible]
சென்னை - 21.

தமிழிசை இயக்கத்தின் வளர்ச்சி

— வி. என். பி. —

தமிழிசை இயக்கம் மூலைகளுக்குள்ளிருந்தஏராளமான தமிழ் இசைப் பாடல்களையும் அவற்றைச் செய்த வித்வான்களையும் வெளியுலகுக்கு அறிமுகப்படுத்தியது. முத்துத்தாண்டவர், மாரிமுத்தாபிள்ளை, அச்சுததாஸர், பாபவிநாச முதலியார், விஸ்வநாத சாஸ்திரி, வேதநாயகம்பிள்ளை முதலியவர்களின் பாடல்கள்ஸ்வரலாகித்திய ரூபமாக அச்சேறின. கச்சேரிகளிலும் வானொலியிலும் இப்பாடல்கள் முழங்கின. இவற்றில் பல பாடல்களுக்குத் தற்காலத்து வித்துவான்களால் வர்ணமெட்டு அமைக்கப் பட்டுள்ளன.

இந்த இருபாதம்நூற்றாண்டில் தோன்றிய சிறந்த இசைப் புலவராகிய பாபநாசம் சிவனும் அவரது அற்புதமான கீர்த்தனங்களும் பரிமளிக்கத் துவங்கியது தமிழிசை இயக்கத்தின் பின்னர் தான். சிவன் அவர்கள் தமிழிலும் சமஸ்கிருதத்திலும் கீர்த்தனைகளை இயற்றினார். அவருடைய தமிழ்க் கீர்த்தனைகளில் சிலசாகித்திய அழகிலும் சங்கீத மெட்டமைப்பின் கவர்ச்சியிலும் இணையற்றனவாய் கர்நாடக சங்கீதமென்னும் பூஞ்சோலையில் என்றும் வாடாத, என்றும் மணம் குன்றாத மலர்களாய் விளங்குகின்றன. அவர் சினிமாவுக்கென்று இயற்றிய சில பாடல்கள் கூட கற்பனையைக் கொள்ளை கொள்ளும் சொல் நயமும் பொருள் நயமும் இசை நயமும் அதிசயிக்கும் முறையில் பொருந்தியுள்ளன. எளிய குடும்பத்தில் வளர்ந்துவரும் உயர்குலத்துப்பிள்ளை சமூகத்திலிருந்து ஒதுக்கப்படுவது போல், சினிமாப்பாட்டுக்களென இவை ஒதுக்கப் படுவது மிகவும் வருந்தத் தக்கது. தமிழில் இசைப் பாட்டுக்கள் இயற்றிய எக் காலத்துப் புலவர்களிலும் பாபநாசம் சிவன் முதன்மை ஸ்தானம் வகிக்கிறார் என்பதற்கு மறுப்போ ஐயமோ இல்லை. இவருடைய 'படைப்புகள் கீர்த்தனை மாலை' என்ற பெயரில் இரண்டு பாகங்களாக நூல் வடிவத்தில் இருக்கின்றன.

'கவிகுஞ்சர பாரதி' என்ற கோடீஸ்வர ஐயரும் இந்நூற்றாண்டு இசையாசிரியர். இவர் சொந்த வர்ண மெட்டமைப்புடன் 'கந்த காமுதம்' என்ற பெயரில் இரு பாகங்களாகத் தமது கீர்த்தனைகளை வெளியிட்டிருக்கிறார் முதற்பாகத்தில் சுத்த மத்திம கர்த்தாராகங்களில்அமைக்கப்பட்ட பாடல்களும் இரண்டாவது பாகத்தில் பிரதி மத்திம ராகப்பாடல்களும் அடங்கியுள்ளன.

தமிழிசை இயக்கத்துக்குப் பின் பெரியசாமி தூரன், எஸ். எஸ் சிதம்பரம் முதலிய பலர் தமிழில் பாட்டியற்றியுள்ளார்கள் இவர்களைப்போலவே இன்னும் பல இளம் புலவர்கள் வருங்காலத்தில் தோன்றுவார்கள் என்பது திண்ணம்.

தமிழிசை இயக்கம் இலங்கையில் இசை வளர்ச்சியை ஒரு புதிய கோணத்திலிருந்து தாக்கியது சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு இலங்கையில் கர்நாடக இசையைக் கேட்[illegible]
திருவிழாக் காலங்களில்தான் [illegible]

(10-ம் பக்கம் பார்க்க)

(தொகுத்தவர்)

பிறவியில்தான் பெற்றனர்-ஒரு அடியார் தில்லைநடராசரின் திருநடனத்தைக் கண்டு, மகிழ்ச்சிக்கடலில் திளைத்து இன்புற்று அந்நடனத்தை என்றுங்காண 'இம்மனிதப் பிறவியும் வேண்டுவதே இந்த மாலிலத்தே என்று கூறி[illegible] முறையிடுகின்றார்.

குனித்த புருவமும்
கொவ்வைச்செவ்வாயிற்
குமிண்சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்
போல் மேனியிற் பால்
வெண்ணீறும்
இனித்தமுடைய எடுத்த
பொற்பாதமும் காணப்
பெற்றால்
மனித்தப் பிறவியும்—
வேண்டுவ தேயித்த
மானிலத்தே.

REGAL — JAFFNA
NOW SHOWING
Sexy Night Shews!
AROUND THE WORLD
IN
90 NIGHTS
(Totalscope - Color)
[ADULTS ONLY]

வரி வினம்பரம்

கோதிடம்

சோதிடத் துறையில் நீண்டகால அனுபவம் பெற்றவரும், இலங்கையிலும், இந்தியாவிலும் ஆயிரக்கணக்கான ஆதரவாளர்களையும், அபிமானிகளையும் பெற்றிருப்பவரான சோதிடக்கலாநிதி க. வேலுப்பிள்ளை அவர்களை உங்கள் பிரச்சினைகளில் கலந்தாலோசியுங்கள். பொன்னைடைகள் - பொற்கிழிகள் - பாராட்டு மடல்கள் மற்றும் பரிசில்களைப் பெற்றிருப்பவர். கட்டண விபரங்களுக்கு 10 சதமுத்திரை அனுப்பவும்.

மங்களேஸ்வரி சோதிட நிலையம், திருக்கோணமலை. 31

தெல்லிப்பழை கிழக்கு துர்க்கை அம்மன் கோயில் திருப்பணி

மேற்படி ஆலயத்தின் திருப்பணிவேலைகள் சென்ற சில ஆண்டுகளாக நடைபெற்றுவருகின்றன. திருப்பணிவேலைகளுக்கு இன்னும் பணம் தேவைப்படுவதால் அம்பாள் அடியார்கள் தங்களால் இயன்ற பொருளுதவியை அளிக்கும்படிவேண்டுகின்றோம்.

திருப்பணிச் சபையினர் தனதிகாரியின் விலாசம்: திரு. ஆறுமுகசாமி அவர்கள், பென்சனர், தெல்லிப்பழை. 25

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும். விபரங்களுக்கு: த. பெட்டி இல: 896, கொழும்பு. (P. O. Box 896, Colombo.) 25

தெய்வு, நீரிழிவு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இலவம். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12-50; நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணானந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

இப்பொழுது திரையிடப்படுகிறது!

இங்கிலிஷ் பிளாஸ் கேர்ள்ட்டே

(கொழும்பு) (வெள்ளவத்தை) (கொட்டாஞ்சேனை)

நவா (கும்பளித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மோடன் (பண்டாரவளை)

விஜிதா (ஹட்டன்) தீவொளி (துவரேலியா) ஜூபிட்டர் (குருநாகல்)

வெலிங்டன்
(யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30

புரட்சி நடிகர்
எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி

மற்றும் பலர் நடித்த

வேட்டைக்காரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதீத அநுபூதிச் செல்வம்

(5ம பக்கத் தொடர்ச்சி)

ரின் மௌனநிலைஒழிந்ததும் மாரி மழை சொரியுமாற் போல உள்ளம் ஊடுருவிக் கசிய தேனினிப்பான திருப் பாடல்களைத் தீரத்துடனும், வீரத்துடனும், சுவையுட னும், பக்தியுடனும் பாடிப் படித்து இறைவனைப் பாராட்டி அவர் முன்னிலை யினிருப்பவர்களை பேசொணு நிலையில் இறைவன் பக்தியில் லயிக்கவைத்து மணித்தியா லைக் கணக்காக அருள்மாரி பொழிவார்.

பகற்காலத்தில் நெடுந்தூரம் நடைப் பிரயாணம் செய்து தனது உள்ளத்திற்குவந்த அடியார்களின் இல்லங்களி லும் கோவில்களிலும் தங்கி அந்திநேரத்தில் ஆசிரமத் திற்குத் திரும்புவது இவரது வழக்கமாயிருந்தது. இந்தச் சுற்றுப்பிரயாணங்களில் பல முறை சுன்னாகத்தில் புனித வாழ்க்கைக்கும் சிவ அநு பூதிச் செல்வத்திற்கும் ஓர் வீரத் தலைவியாகவிருந்த செல்லாச்சியம்மா எனப் பட்ட ஞானச் செல்வியைத் தரிசித்து அளவளாவி திவ்ய அனுபவ விஷயங்களைச் சம் பாஷிப்பதும் இவர் வழக்க மாயிருந்தது. யோகசுவாமி களும் செல்லாச்சியம்மை யாரும் ஆத்மீக அனுபவச் சுவாலைகளாகயாழ்ப்பாணத் திற்கு ஒளிவீசிக்கொண்டி ருந்த காலம் புண்ணியகால மன்றே?

''அட்டாங்க யோகமு
மாதாரமாறு
மவத்தையைந்தும்
விட்டேறிப்போன வெளி
தனிலே வியப்பொன்று
கண்டேன்
மட்டாகி யானந்தத்
தேனூறலுண்டு
மதிமயங்கி யெட்டாத
பேரின்பமென்னை
விழுங்கியிருக்கின்றதே

எனப் பட்டினத்தடிகள் சரியை, கிரியை, யோகத்திற் கப்பால் மோனத்திலாழ்ந்து வெட்டவெளியிற் பெற்ற அநுபூதியாகிய துரியாதீத நிலையை அனுபவக்காட்சி யாகப்பெறற் என்றும் நிலைத்து, அதில் சுவைத்து வாழ்ந்ததிருக்கோலக் காட்சியே அவரின் அடியார்களை யும் அன்பர்களையும் கவர்ந்தது. அதுவே எமது நாட் டில் சென்ற ஐம்பது ஆண்டு களாக ஓர் ஆத்மீக மறுமல ர்ச்சியை ஆக்கிவைத்தது.

பல்லாயிரமாண்டுகள் தோறும் உலகின் பலபாகங் களிலும் பலசமயங்களிலும் ஒளி விளக்குகளாகத் துலங் கிய ஆத்மீக ஆசான்களின் அனுபவசித்திகளையும் அநு பூதிமுறைகளையும் சமீப காலத்தில் ஆங்கிலத்தில் வகுத்துத்தொகுத்து ஆரா ய்ச்சி நூல்கள் வெளிவந்துள் ளன. இவற்றில் அத்வைத அதீத அநுபூதிச்செல்வர்கள் காலத்துக்குக் காலம் தோன்றுகிறது. மகாயான பௌத்த தீவிரஞான முறை களும் இவ்வநுபூதி முறைக்கொப்பானவை. இதைப்போன்ற ஸென் பௌத்த மார்க்கத்தை விளக்கும் நூல்களைத் திரு. க. நவரத்தினத்திடமி ருந்து யான் படிக்கக்கேட் டபோது அந் நூல்களைத் தந்த அவர் ''யோக சுவா மிகளைப் பிரத்தியட்சமாகக் கண்டுகளித்த நீவிர் ஸென் பௌத்தத்தில் புதிதாக என்ன படித்தறியப்போகி றீர்'' என வினவி ''வாய்ப் பேச்சையும் பிரசாரத்தை யும் அவர்கள் கடைப்பிடிப் பதில்லை. இதனை அடியார் கள் அறியாமல் கேள்வி கேட்பின் கேலியான மறு மொழிகளைச் சொல்லி தர்க் கத்தை முறிப்பதே இவ்வ நுபூதிச் செல்வர்களின்வழக் கமாகும்'' எனவும் சொன் னர்.

''சொல்லாலே பயனில்லை
தம்பி
சும்மாவிருந்து பார் தம்பி

என்று சுவாமிகள் பாடிய கண்ணியே அவரின்மார்க்க மெனக் கருதவேண்டும்.

சுவாமிகளும் ஆசானின் வழியைப் பின்பற்றி

'ஆர் அறிவர்
'எப்பொழுதோ முடிந்த காரியம்''

'ஒரு பொல்லாப்புமில்லை
'மூலுவதும் உண்மை

எனக் குறள்போலக் குறுகிய ஆழ்ந்த அநுபூதி மொழிகள் சிலவற்றையே கூறுவர். இவரை ஆசிரமத்திலும் வெளியிலும் தரிசித்த, பக் குவநிலையடைந்த சில அடி யார்கள்சுவாமிகளைக் கண்ட மாத்திரத்திலேயே உள்ளம் குளிர்ந்து புதுமலர்ச்சி பெற் றுஇவ்வுலகப்பற்றை மறந்து துறவு பூண்டனர். இவர்க ளில் இந்நாட்டவர் மாத்தி ரமன்றி மேல் நாட்டவரு முளர்.

இத்தகைய ஆத்மீக அநு பூதிச் செல்வத்தில் சிங்க லட்சணம் பொருந்திய சற் குருநாதர் எங்கள் மத்தி யில் வாழ்ந்ததும் அவரை எம் நாட்டவர் தரிசிக்கும் அரும்பெரும் பாக்கியத் தைக் கொடுத்ததும் நம் அனைவரின் பெரும்பேறுகும். சுவாமிகள் சமாதி நிலைய டைந்தபோதிலும் அவரது உன்னத திருக்காட்சியான ஜீவியத்தை நினைந்து வாழ் வதே எமக்கு எஞ்சியுள்ள பிரசாதமாகும்.

''பத்துப்பாட்டுப் படிப்போ
ரும் கேட்போரும் பாரி
னிலே
வித்தகராய் வாழ்ந்து
பின்னே-சின்னத்தங்கம்
விதேகமுத்தி சேர்வாரடி—
சின்னத்தங்கம்''

நிலையின் கதை

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த சங்கீத சூன்யம் ஏற் படுவதற்கு ஒரு காரணமா யிருந்திருக்கலாம் கோயில் களில்கேட்ட இனிமையான, சுத்தமான சங்கீதம் இயற் கையாகவே இசையுள்ளம் படைத்த இளைஞர்களைப்பற் றிக்கொண்டது. இசையை முறையாகப் பயிலவேண்டும் என்ற ஆசையும் பிறந்தது. சமூகத் தடைகளை மீறிக் கொண்டு பலர் இந்தியா வுக்குச் சென்று இசைபயில ஆரம்பித்தார்கள். அண்ணு மலைப்பல்கலைக்கழகம் இவர் களுக்கு நல்ல வாய்ப்பாய் அமைந்தது.

இசை பயின்றவர்கள் சொந்த நாட்டுக்குத்திரும் பியதும் ஊதியம் பெறக் கூடிய முயற்சி வேண்டுமல் லவா? இந்த வழியில் இலங் கை அரசாங்கம் உதவிய ளித்தது. பாடசாலைகளில் கர்நாடக சங்கீதத்தை ஒரு பாடமாக்கி, சங்கீத ஆசிரி யர் பதவிக்கு அண்ணுமலைப்பல்கலைக்கழகம் வழங் கும் 'சங்கீத பூஷணம்' என்ற பட்டத்தைத் தகுந்த தராதரமெனவும் அரசாங் கம் அங்கீகரித்தது. இது, இசையில் ஆர்வம் கொண்ட இளைஞர்களுக்கு இசைபயில வும், அதே சமயம் அதன் மூலம் உத்தியோகம் தேடிக் கொள்வதற்கு அரியதோர் சந்தர்பமாய் அமைந்தது ஆயிரக்கணக் கானவர்கள் அண்ணுமலைக்குச் சென்று 'சங்கீத பூஷணங் களாகத் திரும்பினர்கள்.

இவர்களில் பெரும்பா லோர், ஒரு சிலரைத்தவிர, அண்ணுமலையில் கற்பிக்கப் பட்ட பாடப்புத்தகங்களின் படிக்குதமிழ் வர்ணங்களை யும் கீர்த்தனங்களையும்பா டம்செய்வதோடுநின்று விட் டார்கள் பட்டம் கிடைத்த தும் திரும்பிவிட்டார்கள். சமுத்திரம்போல் பரந்துவிரி ந்துகிடக்கும் சங்கீதஉலகில் இவர்கள்ஒரு மூலையையேகா ணமுடிந்தது. தியாகையர், தீக்ஷிதர் போன்ற மகான்க ளின்இன்பத் தேனூற்றுக ளைப்பருகும் பாக்கியம்இவர் களுக்கு எட்டவில்லை ஒவ் வொரு புதிய கிருதியையும் பாடப்பழகும் போது, ஒரு புதுப் பூங்காவிலோ ஒரு புது அரசமாளிகையிலோ நுழையும் ஆச்சரியகரமான பேரின்பம் உண்டாகும். அதில் சுற்றிச் சுற்றிக் கும் மாளமிடும்போது கலைஞன் தன் பிறவிப் பயனை அடைகிறான். தெலுங்கிலும் வடமொழியிலுமுள்ள தித் திக்கும் கற்பகக் கனிகளைச் சுவைக்கும் சந்தர்ப்பம் இவர்களுக்கு கிடைத்திருக்க முடியாது. ஆனால் இவர் கள் எல்லோரும் தமிழிசை இயக்கத்தின் தூதுவராக விளங்கினார்கள் என்பது நிச் சயம். உண்மையாகவே இசையில் அளவு கடந்த ஆர்வமுள்ள சிலர் கேள்வி ஞானத்தாலும், பிற ஆசி ரியர்களின் உதவியாலும் அண்ணுமலைக் கழகத்தில் கற்பிக்கப்படும் பாடல்க ளோடு நின்றுவிடாமல் பிற மொழிப்பால்களையும்பழகித் தமது சங்கீத அறிவைவிருத் திசெய்து கொண்டனர்.

தமிழிசை இயக்கத்தாரின் நோக்கத்தின்படி அவ்வியக் கம்இலங்கையில்தான் சுத்த மாகப் பரவியதென்றுகூற லாம்.

(தொடரும்)

யோக சுவாமிகள் ஞாபகார்த்தக்கூட்டம்

யாழ்ப்பாணம், சனி

யோகர்சுவாமிகளின்ஞாப கார்த்தக் கூட்டம் இம் மாதம் 16-ம் திகதி கண்டி யில் நடைபெறவிருக்கிறது. திவ்விய ஜீவனசங்கத்தின் கண்டி கிளை இதற்கான ஏற் பாடுகளைச் செய்துள்ளது.

—

சுழிபுரம் [illegible]

சுழிபுரம், சனி

16 வட்டாரங்களைக் கொண்ட சுழிபுரம் கிராம சபையின் தேர்தல் இவ்வரு டம் பிற்பகுதியில் நடை பெறும் என அறிவிக்கப்பட் டுள்ளது. இந்த வருடம் முற்பகுதியில் நடைபெற இருந்த இத்தேர்தல்பாராளு மன்றப் பொதுத் தேர்தல் காரணமாக ஒத்திவைக்கப் பட்டது.

தொற்றுநோய் பரவுகிறது

பருத்தித்துறை, சனி

இப்பகுதியில் தொடர்ந்து நிலவிவரும் கடும் வரட்சி காரணமாக தொற்று நோய் கள் தீவிரமாகப் பரவுவதா கத் தெரியவருகிறது.

பொதுவாக பல கிராமங்க ளிலும் பொக்கிளிப்பான், சின்னமுத்து, கண்ணேய் ஆகியன காணப்படுவதாகக் கூறப்படுகிறது,

இந்நோய் பரவுவதைத் தடுக்குமுகமாக மந்திகை அம்மன், பருத்தித்துறை சாமுண்டீஸ்வரி அம்மன், கூவில் அம்மன் ஆலயம் முதலானவற்றில் குளித்தி யும் விசேஷ அபிஷேகங்க ளும் கடந்தவாரத்தில் நடை பெற்றன.

—

[illegible]

(1 ம்பக்கத் தொடர்ச்சி)

வகைகள் கையாளப்படுகின் றன. ஆனால் மேல் நாடு களைப்பொறுத்த வரையில் மாணவர்களுடைய ஒவ் வொரு நிலையிலும் உபயோ சுப்பமாறு நன்கு ஆராய்ந்து கல்வித்திட்டங்கள் உருவாக் கியிருக்கிறார்கள்.

ஆசிரியர்கள் திரு. நீல கண்டசிவம், திரு. மு. பத்ம நாதன், கல்லூரி அதிபர் திரு. எஸ். சிவகுருநாதன் ஆகியோரும் உரையாற்றி னர்கள்.

கனகாம்பிகை அம்மன் பொங்கல்

கிளிநொச்சி, சனி

இரணைமடு ஸ்ரீ கனகாம் பிகை அம்பாள் வருடாந் தப் பொங்கல் மகோற்சவம் இம்மாதம் 15-ம் திகதி இரவு சித்திரைப் பௌர் ணமி அன்று நடைபெறும். இப்பொங்கல் வைபவத்தை மிகவும் சிறந்த முறையில் நடாத்துவதற்கு ஏற்ற ஒழுங்குகளை கனகாம்பிகை அம்பாள் ஆலய திருப்பணிச் சபை செய்துள்ளது. பொங் கல் தினத்தன்று இரவு கதாப்பிரசங்கம், இசை நிகழ்ச்சிகள் ஆகியனவும் நடைபெறும்.

—

[illegible]

சுழிபுரம், சனி

வடக்கு, கிழக்கு மாகா ணங்களிலுள்ள உள்ளூ ராட்சி மன்றங்களில் லிகிதர்களாக நியமிப்பதற் காக நடத்தப்பட்ட பரீட் சைகளில் சித்திபெற்றவர் கள் இன்னமும் நியமனங் கள் கிடைக்காததால்ஏமாற் றத்துக்குள்ளாகியிருப்ப தாக அறியப்படுகிறது.

மூன்று வருடங்களுக்கு முன்னர் இப்பரீட்சையில் தோற்றி சித்தியடைந்தவர் களுக்கு கூட இன்னமும் நிய மனம் கிடைக்கவில்லையென தெரியவருகிறது.

[illegible]

யாழ்ப்பாணம், ஞாயிறு

திருநெல்வேலி ஸ்ரீ நீலா யதாக்ஷி சமேத காயாரோக ணேஸ்வரர் கொடியேற்றம் வரும் செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி தொடக் கம் 12 மணிவரை நிகழும்.

[illegible]

பம்பலப்பிட்டி, சனி

தமிழரசுக் கட்சியுடன் செய்துகொள்ளப் பட்டுள்ள எந்தவித ஒப்பந்தமும் நாட் டுக்கு கேடு விளைப்பதாக இருக்கமாட்டாது என த் தாம் உறுதிகூறுவதாகப்பிர தமர் திரு. டட்லி சேன நாயகா தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அங்கத்தவர் களின் தொடர்ச்சியான கேள்விகளுக்குப் பதிலளிக் கையிலேயே பிரதமர் மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம், சனி

பரீட்சார்த்தமாக யாழ்ப் பாணத்தில் நடத்தப்பட்ட உருளைக்கிழங்கு உற்பத்தி வெற்றியளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தியான சுமார் 600 அந்தர் உருளைக் கிழங்கு விவசாய இலாகா வுக்கு விற்பனை செய்யப்பட் டது. இங்கு உருளைக்கிழங்கு உற்பத்திக்கு விவசாய இலாகா ஊக்கமளித்துவருகி றது.

விஜயா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
திறப்பு விழா

வருகிற 14-4-65 புதன்கிழமை
காலை 9-00 மணியளவில் வரும் சுபவேளையில்
திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர்)
மேற்படி ஸ்தாபனத்தை திறந்துவைப்பார்.
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

146, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 357

இவ்வண்ம்
தங்கள் நல்லரவை நாடும்
ச. அ. நடராசா
(உரிமையாளர்)

புத்தூர்
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி
பழைய மாணவர் தினம்
14-4-65, புதன்கிழமை
நிகழ்ச்சிகள்:
காலை 8 மணி: கிரிக்கெட் ஆட்டம்
மாலை 1 மணி: அதிபரின் மதிய போசனம்
மாலை 3 மணி: வருடாந்தப் பொதுக்கூட்டம்
பழைய மாணவர்கள் அனைவரும் தவறாது வருகை தருமாறு அன்புடன் வேண்டப்படுகின்றனர். தனித் தனி அழைப்புகள் அனுப்பப்படவில்லை.
பொ. இரத்தினசபாபதி
காரியதரிசி. 121

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத் தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org